

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள், 03ம் நாள் (17-03-2022) நிறைவமதி வெளியீடு +94 21 221 2739


## சிவமடத்தின் வாழ்த்துகள்



புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவன் செல்வன் தமிழ்ச்செல்வன் கஜலக்சன் அவர்களுக்கு தென்னாடு சிவமடத்தின் வாழ்த்துகள்.

# தமிழ் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் அம்மாவிற்கு ஒருநாள்

# சித்திரை நிறைமதி விரதம் இம்முறை 16ம் திகதி சனிக்கிழமை

தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்”சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் தமிழர் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. இந்த சித்திரையில் வருகின்ற நிறைமதி நாளும் (சித்திரை பௌர்ணமி) பழந்தமிழர் வாழ்வியலில் இரண்டறக் கலந்த நாளாகும்.

தமிழர் புதுவருடமாகிய சித்திரை திங்களில் வரும் சித்திரை / அறுவை நாண்மீனும் (நட்சத்திரம்), முழுமதி / நிறைமதி சேர்ந்த தினமே, இந்த சித்திரை நிறைமதி நாளாகும். இந்நாளில் சூரியன் மேழம் நல்லோரையில் உச்சம் பெற்று நேர் எதிரில் சந்திரனின் சம உச்சவீடான துலாத்தில் சந்திரன் சித்திரை நாண்மீனில் (நட்சத்திரத்தில்) வருகின்ற நிறைமதிப் பிறை நாளே / திதியே, சித்திரை சிறப்பு நிறைமதி(பௌர்ணமி) நாளாகும்.

உலகின் பிற பகுதிகளில் உலக தாய்மார் தினம் கொண்டாடப்படுகிறது அனால் தமிழர் மரபில் வாழும்போது அன்புக்கடலாகவும், வாழ்ந்தபின்னும் சித்திரை நிறைமதியன்று குலதெய்வ நாளாகக் கொண்டாடப்படுகிறது.



# இளவேனில் சித்திரையே தமிழர் வருடப்பிறப்பு

## இம்முறை நற்செய்கை (சுபகிருது) வருடப்பிறப்பு 14 காலை 7.50 மணி




இளவேனில் சித்திரையே பண்டைத்தமிழர் வருடப்பிறப்பு ஆகும். இம்முறை நற்செய்கை (சுபகிருது) ஆண்டு சித்திரை முதல்நாள் அதாவது 14ம் திகதி வியாழக்கிழமை இலங்கை இந்திய நேரப்படி காலை 7.50 (14-04-2022) மணிக்குப் பிறக்கிறது. இது சித்திரைத் திங்கள் வளர்பிறை பதின்மும்மை பிறைநாளும் (திரயோதசி) கணை நாண்மீன் (பூர நட்சத்திரம்) நான்காம் பாதமும் கூடிய நன்னாளாகும்.

தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்”சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் தமிழர் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. சித்திரைத் திங்களே பழந்தமிழரின் புத்தாண்டு என்பதை நெடுநல்வாடை சிறப்பாக எடுத்துரைக்கிறது. **“திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண் ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலம்”** என விளக்கியுள்ளார் நக்கீரர் அவர்கள். இங்கு ஆடு தலையாக என்பது, மேழம் தான் ஒரையில் முதலாவது மற்றும் தலையானது. அதுவே ஆண்டின் பிறப்பாகும் என்பதாகும். (பக் 3 )

# திருவாரூர் அழித்தேர்ப் பெருவிழா - பங்குனி உத்தரம்


ஆரூரா தியாகேசா


பிரமாண்ட அழித்தேர்


சறுக்கு/முட்டு கட்டைகள்


மக்கள் வெள்ளம்


திருவாரூர் அழித்தேர்

# தென்னாடு பெருஞ் சிவனிரவு ஐம்பூதநாதர் திருக்கோலம்









# தென்னாட்டில் ஐம்பூதநாதர் பெருஞ்சிவனிரவு வழிபாடு



ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனுடைய அரும்பெரும் பெருமைகளை நினைந்து, அவனை வழிபட்டு உய்யும் விரத நாளாகிய பெருஞ்சிவனிரவு விரதம் இம்முறை கடந்த சில நாட்களுக்கு முன்னர் உலகெங்கும் வெகு சிறப்பாக இயற்றப்பட்டது.

**பிறங்கு மாசியிற் பிற்பதினாலதே**
**யறங் கொணற்சிவ ராத்திரியாமிதி**
**லுறங்க லின்றி யுஞற்றிடிற் பூசனை**
**பெரும் பெரும்பலன் பேசரி தாகுமே**


என்று ஈழத்து இலக்கிய நூலான சரசோதி மாலை சிவனிரவைப் பற்றிக் கூறிப் போகின்றது. "விரதம் என்பது மனம் பொறி வழிப் போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடல்" என்று இயம்பிப் போந்தார் ஆறுமுக நாவலர் பெருமானார். விரதத்தின் அத்தகு நிலையில் இருந்து இன்னும் ஒரு படி மேலே சென்று உணவோடு தூக்கத்தையும் விடுதலே சிவனிரவு விரதம். இத்தகு விரத வழிபாடு தென்னாடு செந்தமிழாகம மடத்திலும் வெகு செம்மையாக இடம்பெற்றது.

அருட்சுனைஞர் சிவத்திரு பா. சிவமாதவன் அவர்கள், திருவருளோடு முதல் மூன்று இரவு வழிபாடுகளையும் இயற்றினார். நான்காவது இரவுப் பூசை அருட்சுனைஞர் சிவத்திரு விஷ்ணுயன் அவர்களால் இயற்றப்பட்டது. அருகில் வசிக்கும் பெரும்பாலான அடியார்கள், மடத்திற்கு வருகை தந்து, துயில் விழித்து, பூசைகளில் இணைந்து வழிபட்டனர். ஒவ்வொரு காலப்பூசை இடைவெளியிலும் அடியார்கள் சிவனுக்கு நீர் ஊற்றி வழிபட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி பெரும்பாலான அடியவர்கள் நான்கு வேளையும் நீர் ஊற்றி வழிபட்டனர். மேலும் இசை நிகழ்வு, மற்றும் கண்ணப்பர் நாடக நிகழ்வு போன்ற தென்னாடு அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும், சிவமாதவன் அவர்களின் சொற்பொழிவுகளும் மடத்தில் இடம்பெற்றன. அடுத்தநாள் காலையில் அடியார் திருவமுது நிகழ்வுடன் வழிபாடுகள் யாவும் நிறைவுற்றன.

அத்துடன், நீர்கொழும்பிலிருந்து பெருந்தொகையான மக்கள், கீரிமலை நகுலேச்சரத்திற்கு வருகை தந்து, சிவனிரவை துயில் விழித்து வழிபட்டுவிட்டு, காலை தென்னாட்டிற்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் ஓய்வெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் தென்னாட்டில் செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் சிறப்புப் பூசை நடைபெற்றது. இறுதிகாலப் பூசை நிறைவடைந்து, அருட்காட்சி தந்த ஐம்பூதநாதரை காணும்பேறு அவர்களிற்கு கிட்டியிருந்தது. அதனைத் தொடர்ந்து, அவர்களுக்கு திருவமுது செய்விக்கப்பட்டு, வழியனுப்பிவைக்கப் பட்டனர்.

**ஐம்பூதநாதரே போற்றி போற்றி**
**திருச்சசிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திருப்பெருகு ஞானலிங்கேச்சரர் சிவனிரவு வழிபாடு



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உறையும் ஞானலிங்கேச்சரப் பெருமானுக்கு சிவனிரவு வழிபாடுகள் மற்றும் பூசனைகள் தென்னாடு செந்தமிழாகம மடத்தினரால் இயற்றப்பட்டன.

**தடங்கொண்ட தொர் தாமரைப் பொன்முடி தன் மேல்**
**குடங்கொண்டடி யார் குளிர் நீர்சுமந் தாட்டப்**
**படங்கொண்ட தோர் பாம்பரை யார்த்த பரமன்**
**இடங்கொண்டி ருந்தான்ற னிடைமரு தீதோ**

என்று நாவுக்கு அரசரான அப்பர் சுவாமிகள் சொல்லிப் போன வாக்குக்கு அமைய, அங்கு பாடசாலை மாணவர்களும், பழைய மாணவர்களும், அயலில் வாழ் மக்களும் கலந்து கொண்டு நீர் ஊற்றி வழிபட, அவர்களுக்கு அருள் பாலித்த வண்ணம் சிவனிரவு வழிபாடு கண்டார் ஞானலிங்கப் பெருமான். நான்கு காலமும் சிறப்புத் திருமஞ்சனமும் பூசைகளும் என சிறப்பாக நடந்தேறியது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஞானலிங்கேச்சரர் சிவனிரவு வழிபாடு.

**திருச்சிற்றம்பலம்**

# சங்கை நாதரின் சிவனிரவு வழிபாடு



சங்கேந்து கையானும், தாமரையில் அமர்ந்தானும் தேடிக்காணா சோதியான சங்கானை, வாரண வைரவர் சூழ் சங்கை நாதப் பெருமானுக்கு சிவனிரவு வழிபாடுகள் நல்ல முறையில் இடம்பெற்றன. அண்மையில் குடமுழுக்கு கண்ட சங்கைநாதர், சங்குத் திருநீராட்டும் கண்டிருந்தார். அதன் பிறகு அவ்வூர் மக்களால் அவருக்குரிய சிவனிரவு வழிபாடுகள் இடம்பெற்றன. பாம்பில் மேலமர்ந்த மாலாலும், அயனாலும் தேடியும் அறிய இயலா பெரும் சோதிப் பெருமான், அடியவர் மீது கொண்ட அளவிலாத கருணையினால் எளிவந்து, அவர்கள் செய்யும் வழிபாட்டை எற்கத் திருவுருக் கொண்டார். அத்தகு இறைவனுக்குரிய வழிபாடுகள் உலகெங்கிலும் சிவனிரவு தினத்தில் நடைபெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# வாரிவனத்தில் (சாவகச்சேரியில்) எழுந்தருளியிருக்கும் வாரிவனேசர் சிவனிரவு வழிபாடு

**சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடி தாமரையானே.**

சிவபூமியென்று புகழப்படும் இலங்கையில், விருபாக்கன் என்பவரினால் வாரிவனத்தில் (சாவகச்சேரியில்) உருவாக்கப்பட்ட தான்தோன்றி இலிங்கக் கோயில், பின்னர் சோழர்களால் பெரிதாக்கி வழிபடப்பட்டு, பிற்பகுதியில் போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்களால் கோயில் முற்றாக நாசமாக்கப்பட்டது. அதன்பின் சாவகச்சேரியில் மத்திய போக்குவரத்து நடுவத்திற்கு அண்மித்த இடத்தில் புதிய கோயிலமைத்து சோழர்கால வாரிவனலிங்கத்தினை வைத்து மக்கள் வழிபட்டு வந்த நிலையில், மீண்டும் இறைவன் திருவருளால் வாரிவனத்தின் நடுவிலே நீதிமன்ற வளாகத்தின் முன் புதுப்பொலிவுடன் கருங்கல் கருவூலமாகவும் புதிய இலிங்கமாக வாரியப்பர் எழுந்தருளி செந்தமிழில் வழிபடப்பட்டு வருகின்றார்.

இவ்வாறு, சாவகச்சேரியில் உறைந்தோங்கி உலகாளும் வாரிவனேசப் பெருமான் திருக்கோயிலில் சிவனிரவு வழிபாடுகளை நீதிமன்ற வளாகத்தினர் பொறுப்பேற்று செம்மையாக நடத்தி முடித்திருந்தனர். சோழர்கால வரலாறு உடைய இத்திருவிடத்தில் எம்பெருமான் சிவனிரவில் எழுந்தருளி ஊரவர்களுக்கு அருட்காட்சி கொடுத்தமை பெரும்பேறாகும். அத்தகு பெருமானுக்கு உரிய நான்கு வேளையும் திருமஞ்சனங்களும் வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. ஊர் மக்கள், நீதிமன்ற வளாகத்தினர், கடைக்காரர்கள் என பலரும் வழிபாட்டில் கலந்து, நீர் ஊற்றி, இறைவனை வணங்கி உய்தனர். நீதிமன்ற வளாகத்தினரால் சிவனடியார்களுக்கு திருவமுது செய்விக்கப்பட்டமையும் சிறப்பாகும்.

**திருச்சிற்றம்பலம்**



# பழந்தமிழரின் சித்திரைப் புத்தாண்டை மீட்போம், தமிழர்களுக்கும், தமிழுக்கும் இழைக்கும் பெரும் வானியல் அறிவியல் தீங்கை தடுப்போம்

வானியல் வடிவியல் கணித வழியாக தமிழர் ஆண்டு பிறப்பு தொல் தமிழர் சித்திரையிலிருந்து புதிய தைப்புத்தாண்டுக்கு மாற்ற முடியாது. ஏன்?

The birth of Tamil new year cannot be changed from ancient Chitra month to new Thai birth year through Astro Geometrical Mathematics. Why ?

அண்மைகாலமாக பரவலாக தமிழர்களுக்கு நம்பிக்கையாகத் திணிக்கப்பட்ட, இரண்டு தவாறான கருதுகோள்கள் (Hypothesises).

i) தமிழ்ப் புத்தாண்டு சுறவம் (தை) திங்களில் பிறக்கின்றது என்ற கருத்து. தமிழர் வானியல் அறிவியல் ஆய்வு சாராது எழுந்த கருதுகோள்.

ii) தமிழ் அறிவியல் மரபைப் பெரிதும் மீண்டும் அரசியலுக்கு உட்படுத்திய ஒரு கூற்று புதிய தைப்புத்தாண்டு பிறப்பு.

தொல் உடு பெயார சித்திரைப் புத்தாண்டு (Ancient Chitra Sidereal Year) இல் இருந்து புதிய தைப் புத்தாண்டுக்கு (New Thai Tropical Year) மாற்றும் கணிதத்தை அறிவியல் சான்றுகளோடு வெளியிடாது தமிழர்களைப் புதிய தைப் புத்தாண்டுக்கு மாற்றும் முயற்சியைச் செய்வது தமிழர்களுக்கு இழைக்கும் பெரும் அறிவியல் தீங்காகும். ஆகவே தொல் தமிழ் உடு வானியல் சித்திரையிலிருந்து புதிய தைப் புத்தாண்டுக்கு மாற்றக் கோரும் அனைத்துத் தமிழர்களுக்கும், சில கேள்விகளும், அறிவியல் பணி பட்டியலும் (Scientific Task List) கீழே தருகிறேன்.

முதலில் மீண்டும் ஒரு சிறு விளக்கம். தமிழர்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே சூரியக் கடவுப் பாதையையும் (வட செலவு , தென் செலவு), நிலவுப் கடவு பாதையும், கோள்களின் கடவுப் பாதைகளையும், பெயராத நாள்மீன் கூட்டங்களைப் பின்புலம் நிறுத்தி உருவாக்கிய தொல் வானியல் கணிதமே, உடு ( நாள்மீன்கள் ) பெயரா கால ஆண்டு (Sidereal year ) சித்திரை ஊழி கால அறிவியல் ஆகும். NASA போன்ற உலக வானியல் ஆய்வு மையங்கள் ஏற்கும் சரியான துல்லிய கால அளவையியல், அறிவியல் சார்ந்த உடு ( நாள்மீன்கள்) பெயரா கால ஆண்டு முறையே (Sidereal year ) ஆகும். இன்றளவில் நமக்கு இவையாவும் ஐந்திரமாக (பஞ்சாங்கமாக) கிடைக்கும். இதனை மீள் கணிதமாக உருவாக்கி ஒரு கணிதச் சூத்திரமாக (Mathematical Formula), பன்னிரண்டு கட்டத்தில் உருவாக்குவது, இன்றைய கணித அறிஞர்களுக்கே இயலாத ஒன்றாகும்.

முற்றிலும் சூரியக் கடவுப் பாதையை (வட செலவு, தென் செலவு) மட்டுமே வைத்து வானியலை அளப்பதை சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) என்று அழைப்பார்கள். இது ஆங்கிலேய ஆண்டை (Tropical year) பின்பற்றும் ஒரு முறையாகும். ஆங்கிலேயர்கள் இக்கணிதத்தை நமக்கு கணித சூத்திரமாக ( athematical Formula) உடனடியாகத் தர இயலும். சூரியக் கடவு பாதையை (வட செலவு, தென் செலவு) மட்டுமே வைத்து வானியலை தைப்புத்தாண்டு ஆயப்புள்ளியாக ( Geometrical Coordinate Origin ) வைத்து, ஆங்கிலேய ஆண்டை (Tropical year) பின்பற்ற முனைந்து செயல்படும் தமிழர்களுக்கு சில கேள்விகளும், அதை உறுதிபடுத்த ஒரு அறிவியல் பணி பட்டியலை (Task List) தாங்கள் செய்யவும்.

தொல் தமிழ் உடு வானியல் சித்திரையிலிருந்து, புதிதாக தைக்கு மாற்றக்கூறும், (மாற்ற விரும்பும்) தங்களுக்கும், தங்களைப் போன்று, தமிழர் தைப்புத்தாண்டு கால மாற்றம் விரும்பும் மற்ற அன்பர்களுக்கும் ஒரு சிறு வானியல் அறிவியல் பணி பட்டியலை (Task List) ஒரு காரணத்தோடு தருகிறேன் அதனை ஒவ்வொன்றாக சரியாகச் செய்துவிட்டு, தமிழர் வானியல் அறிவியலை முதலில், உலகத் தகைமை வானியல் புதுவ அறிவியலுக்கு ( Modern Science) நிகர் செய்துவிட்டு, தங்களின் அடுத்தக் கட்ட புதிய தைப்புத்தாண்டு மாற்றத்தைப் பற்றி, அல்லது குழப்பமிக்க, சான்றுகளற்ற புதிய தைப்புத்தாண்டு வரலாறு பின்புலங்களை விரிவாகப் பேச விழைவோம்.



முனைவர் இரா.சிவகுமார்
மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்

1) முதலில், புதிய தைப்புத்தாண்டு வேண்டும் என்று முன்மொழியும் நீங்கள் எந்தக் கால கணிதத்தைத் தற்போதைய ஐந்திர (பஞ்சாங்க) சித்திரைக்கு மாற்றுத் தமிழ் கணிதமாகப் பயன்படுத்தி வருகிறீர்கள்? அப்படி ஒன்று தங்களிடம் இருந்தால் முதலில் அதனை வெளியிடவும். அதிகம் வேண்டாம் சூரியன் காலையில் எந்த நேரத்தில் உதயமாகும் என்ற கணிதத்தையும், நிலவு எப்பொழுது, ஒரு நாள்மீன் கடக்கும் என்ற நேர கணிதத்தையும் துல்லியமாக கணக்கிடும் முறையை ஒரு கணித வழித்தோன்றலாக (Mathematical Derivation)-னாகத் தரவும்.

2) சித்திரையிலிருந்து, தைக்கு மாற்றக்கூறும் தங்களுக்கு இன்னொரு பணி. தற்போது நீங்கள் தொல் தமிழ் உடு வானியல் சித்திரை கால கணிதத்தையே பயன்படுத்தி வருகின்றீர்கள் என்றால், அதனை முதலில் தூக்கி எறிந்துவிட்டு, பழந்தமிழ் ஐந்திரத்தை (பஞ்சாங்கத்தைப்) பயன்படுத்தாது, ஆங்கிலேயர்கள் கணிதத்தைப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு புதிய தமிழர் கணிதத்தை மீள் உருவாக்கம் செய்து, பின்பு உடனடியாக நாங்கள் தொல் தமிழ் சித்திரை கணிதத்திலிருந்து, புதிய தை கணிதத்திற்குப் பெயர்கிறோம், புதிய தமிழ் கால நாள்காட்டி உருவாகி விட்டது என்று பரப்புரை (பிரகடனன்) செய்யுங்கள். பின்பு தமிழ் சித்திரை ஐந்திரத்தை (பஞ்சாங்கத்தை) எரியூட்டி கொளுத்துங்கள்.

அதைச் செய்யாது, தொல் தமிழ் சித்திரை கால நாள்காட்டி ஐந்திரத்தில் (பஞ்சாங்கத்தில்) அமர்ந்து கொண்டு, அதன்மேல் சவாரி செய்துகொண்டு, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதுபோல், பழந்தமிழர் ஐந்திரத்தை (பஞ்சாங்கத்தை) கொளுத்து, தமிழ் சித்திரையை எதிர்த்துப் போராடு, ஆண்டு பிறப்பைத் புதிதாக தைக்கு மாற்று என்று ஆர்ப்பாட்டம் செய்வதற்குப் பெயர் என்ன? முதலில் சித்திரை எனது அல்ல, ஐந்திரம் (பஞ்சாங்கம்) எனது அல்ல என்ற தீர்க்க முடிவுக்கு வந்து விட்ட நீங்கள், ஊரார் வீட்டிற்குள் புகுந்து, உரிமையெடுப்பது போல் வேண்டா என்று தள்ளி விட்ட பழந்தமிழர் சித்திரை ஐந்திரத்தில் அமர்ந்து கொண்டு ஆண்டு பிறப்பைத் புதிதாக தைக்கு மாற்று என்று கோருவதற்கு என்ன பெயர்? அதற்கு பெயர்தான் தமிழை அரசியல் படுத்துவது அல்லது ஆதாயப் பொருள் ஆக்குவது.

3) கேள்வி, சைவ சமயம் சார்ந்தவரோ, சாராதவரோ, வேண்டுபவரோ, வேண்டாதவரோ - தைப் புத்தாண்டு சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) பிறப்பிற்கு மாற்றக் கோரும் அத்தனை தமிழ் உணர்வாளர்களுக்கும், புதிய புத்தாண்டு வேண்டுவோர் எப்படி இப்புதிய கணிதத்தைச் செய்தார்கள் என்று ஒரு கணித சூத்திரமாக ( Mathematical Formula) அல்லது செய்முறை (Methodology) வழியாக விளக்கினால் நன்றாக இருக்கும். கேள்வியை நன்றாக உள்வாங்கித் தங்களின் பதிலை அல்லது செய்முறையை எழுதவும். இக்கேள்விக்குப் பதில் எழுதத் தங்களுக்கு எப்படிச் சரியாக சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) கணிதம் செய்வது என்று தெரிய வேண்டும். அதை முதலில் கணித சூத்திரமாகவோ ( Mathematical Formula) அல்லது செய்முறை (Methodology) வழியாகவோ முதலில் உறுதிபடுத்தவும். முடிந்தால் அதனை ஆங்கிலேயர்கள் எப்படி கணிதமாக்கியுள்ளனர் என்பதைத் புதுவ அறிவியல் (Modern Science) வானியல் நூல்களில் கற்றுத் தெளிந்து, பின்பு நீங்கள் உருவாக்கிய புதிய தமிழர் செய்முறையை நீண்டு விரிக்கலாம், விளக்கலாம்.


4) அடுத்தக் கேள்வி நீங்கள் வகுத்த புதிய சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) கணித முறையை (Methodology) வைத்து எப்படி நிலவுக் கடவுப் பாதையையும், கோள்களின் கடவுப் பாதைகளையும், பெயராத நாள்மீன் கூட்டங்களைப் பின்புலம் நிறுத்தி சூரியக் கடவுப் பாதையையும் (வட செலவு, தென் செலவு), வைத்துக் கணிதம் செய்ய இயலும் என்பதை உறுதிபடுத்தி ஆதாரத்துடன் வெளியிடவும்.

5) அடுத்ததாக உங்களால் தைத் திங்களைக் கணக்கிடும் ஆயப்புள்ளி (Geometrical Coordinate Origin) எதுவென்று முறையாக நிறுத்தி, சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) கணிதமுறையில் (Methodology) எப்படி , உடு (நாள்மீன்கள்) பெயரா வானியல் கணிதம் செய்ய இயலும் என்பதையும் விளக்கவும். அடுத்தாக நீங்கள் உருவாக்கிய அந்தப் புதிய ஆய அச்சு வடிவியல் வானியல் கணிதத்தை ( Cosmo Geometrical Coordinate Mathematics) அறிவியல் பின்புலம் கொண்டு உறுதிப் படுத்தும் முறையைத் (Empirical Evidence) தந்து அறிவியலாக்கிக் காட்டவும். அப்படி உருவாக்கிய பின் தகமை சார்ந்த உலக வானியல் அறிவியல் சஞ்சிகைகளில் அதை பதிவு செய்யுங்கள். பிரசுரியுங்கள். தமிழ் அறிவியல் வளரும் தமிழர் அனைவரும் அதனால் பெருமை அடைவர். தங்களைப் போற்றுவர்.

6) வானியல் அறிவியல் என்பது பெருங் கணிதம். அது நீங்கள் நினைப்பது போல் உங்கள் கைக்கு அடங்கும் கைபேசி அல்ல. முதலில் ஓர் ஆழ் அறிவியல் கேள்வியை இங்கு கேட்கிறேன். மீயண்மை ( Perihelion)- மீச்சேய்மையைக் (Aphelion) சராசரி வெப்பநிலையை எப்படி தங்களின் புதிய தைப் புத்தாண்டு சூரிய கணிதத்தில் கணிக்க இயலும் என்பதை ஒரு சிறிய ஆய்வு ஏடாக முதலில் தரவும். அத்தோடு அல்லாது புதிய தைப் புத்தாண்டு வேண்டும் தமிழர்கள் அதனை எப்படி செய்தனர் என்பதையும் சேர்த்து விளக்கவும். அதுவே தங்களின் தமிழர் வானியல் கண்டுபிடிப்பிற்கு முதல் வெற்றி.

இது வரை நீங்கள் ஓர் ஆண்டில் எப்படிப் பல்லாயிர நாள்மீன் தோற்றங்கள் உருவாகி நிற்கின்றன, அதனை எப்படி, ஏன் தமிழர்கள் 12 வட்டணையாக வகுத்தனர், 8, 10 போன்ற வட்டணை அல்ல. புவியின் வட்டணைத் தள (Plane Of Orbit) வட்டப் பிறழ்ச்சி (Eccentricity) , சாய்மானம் (Axis Tilt) , அச்சலைவு (Precession Of Axis-Tilt)> தலையசைவுஃகிறுவாட்டம் (Nutation/ Gyration/Wobbling), மந்தோச்ச அலைவு (Apsis Precession), மீயண்மை (Perihelion), மீச்சேய்மையைக் (Aphelion), சூரிய

(04ஆம் பக்கம் பார்க்க)



**பழந்தமிழரின் சித்திரைப் புத்தாண்டு...**
**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

வட்டப்பிறழ்ச்சி (Eccentricity), இவையெல்லாம் எப்படிக் கணக்கிடப்படுகின்றன என்று சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) கணிதத்தைக் கொண்டு கணக்கிட்டுக் காட்டிவிட்டுத், தையைப் புத்தாண்டாக ஆக்கலாமா வேண்டாமா என்று பின்பு நீங்களே முடிவுக்குக் கொண்டு வரலாம். அதன் பின் வானியலை ஆய்வு செய்யும் என்னைப் போன்றோர் மறுக்க அங்குத் தேவையும் இல்லை, நாங்களும் மறுப்புத் தெரிவிக்க மாட்டோம். வரவேற்போம்

7) இதுவரை சூரியமான அல்லது சௌரமான ஆண்டு (Tropical Year) கணிதத்தைக் கொண்டு, நிலவுக் கடவுப் பாதையும், கோள்களின் கடவுப் பாதைகளையும், பெயராத நாள்மீன் கூட்டங்களைப் பின்புலம் நிறுத்தி சூரியக் கடவுப் பாதையையும் (வட செலவு , தென் செலவு), நிலவு கடவுப் பாதையும், கோள்களின் கடவுப் பாதைகளையும், பெயராத நாள் மீன் கூட்டங்களைப் பின்புலம் நிறுத்தி உருவாக்கிய கணிதத்தை, எந்தக் கணித அறிவியல் மேதையும் செய்ததில்லை, அதைச் செய்யவும் முடியாது. முடிந்தால் நீங்கள் முறையான அறிவியல் சான்றுகளோடு, அதை மறுத்தால், உலக வானியலில் அறிவியலில் ஒரு புதிய சாதனையாளராக நீங்கள் திகழ்வீர்கள். இது ஒரு தமிழரிடம் நான் பெரிதும் காண விழையும் ஓர் அறிவியல் படைப்பு. எனது மனமகிழ்வே அதுதான். பல ஆண்டுகளாக பல வானியல் சஞ்சிகைகளை, நூல்களைப் படித்து அப்படி ஒரு கணிதம் இருந்ததாக என்னால் எங்குமே காண முடியவில்லை. அப்படித் தங்களால், மேற்கூரியவற்றை செய்ய முடியவில்லை என்றாலும் ஒரு வானியல் (வரலாறு பேசும் இலக்கியம் அல்ல) அறிவியல் நூலோ, அறிவியல் தகைமையுடைய சஞ்சிகையிலோ பார்த்தோ, படித்தோ இருந்தால், முதலில் ஒரு சான்றாக எனக்கு எடுத்துக்காட்டவும். அப்படித் தங்களால் அதனைச் செய்ய முடியும் என்றால், ஒரு கணிதத்துறை அறிஞராக நான் தங்களுக்கு, முதலில் தலைவணங்குகிறேன்.

8) இவையாவையையும் சரியாகச் செய்துவிட்டு, தமிழர் வகுத்தப் பன்னிரண்டு வட்டணையில் (கட்டத்தில்) உருவாக்கித் தந்தப் பின்பு இவையாவையையும் தமிழ் ஆன்றோர்கள் செய்த தொல் வானியலோடு பொருந்தி வரும் சான்றுகளோடு மக்களுக்குத் தர முடியுமா? தாங்கள் முதலில் தொல்காப்பியரின் கால வகுப்பிற்கு எப்படி புதிய தைப்புத்தாண்டு பொருந்துகிறது என்பதற்கு பதில் சொல்லியப் பின்பு மற்ற ஆன்றோர் வானியல் கணிதத்திற்குப் பதில் சொல்ல முயற்சி செய்யவும்.

9) கொடுத்த அறிவியல் பணிப் பட்டியலை (Task List) முடித்துவிட்டு, தொல் தமிழர் வானியல் அறிவியலைச் சரியாகத் தெரிந்து கொண்டு, தாங்க்கள் வகுத்த புதிய தமிழர் கணியத்தை முறையாக எழுதிப் பதிவிடவும். பிறகு தையைப் புத்தாண்டாக மாற்றுவதா இல்லையா என்ற கேள்விக்கு வருவோம். அப்படிச் செய்ய தங்களால் முடியுமென்றால், அதுவே உலகம் ஏற்கும் புத்தறிவியல் என்பதால் அதற்கு மேல் புத்தாண்டு விவாதங்கள் தேவையில்லை. தமிழர்கள் உருவாக்கிய கணிதத்தை உலக அறிவியல் அறிஞர் அனைவரும் ஏற்பர். யாருக்கும், எந்த மறுப்பும் இல்லை. நான் பெரும் மகிழ்வடைவேன்.

10) அடுத்துத் தங்களின் பணிபட்டியலில் (Task List) நீங்கள் யாவரும் சேர்க்க வேண்டியவையும் விளக்க வேண்டியவையும் சில உள்ளன, அதையும் சரியாகச் செய்து உங்கள் சான்றுகளுடன் இணைத்து விடவும். அதாவது ஒரு நீண்ட அறிஞர் பட்டியலை தைத் திங்கள் புத்தாண்டிற்கு மேற்கோள் காட்டி, இவர்கள் தான் தைப்புத்தாண்டு மாற்றத்தை தமிழர்களுக்கு வழியுறுத்தியுள்ளனர் என்று உறுதியாக சொல்கிறீர்கள். அவர்கள்,

01.தமிழ்க்கடல் மறைமலை அடிகளார், 02.மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 03.பாவலரேறு பெருஞ்சித்திரனார், 04. பேராசிரியர் கா.நமசிவாயர், 05.தமிழ்க்கணிய மேதை இ.மு. சுப்பிரமணியனார், 06. முனைவர் மு.வரதராசனார், 07.திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார், 08.பெருந்தொண்டர் வ. வேம்பையனார், 09.பேராசிரியர் தமிழண்ணல், 10. தமிழறிவியல் அறிஞர் வெங்காலூர் குணா, 11. குடந்தை கதிர். தமிழ்வாணனார், 12.அ.சி. சின்னப்பத்தமிழர், 13.முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதர், 14.தமிழ்முனிவர் திரு.வி.க, 15.பாவேந்தர் பாரதிதாசனார், 16.தமிழ்க்காவலர் கா.சுப்பிரமணியனார், 17.நாவலர் ந.மு.வேங்கடசாமியார், 18.நாவலர் சோமசுந்தர் பாரதியார், 19. பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியனார், 20.சிந்தனையாளர் வே.ஆனை முத்து, 21.முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், 22.சிவனியப் பெரியார் சச்சிதானந்தனார், 23.தோழர் பெ. மணியரசனார் 24.புலவர் குழுவினர் (1971), அத்துடன் மலேசியாவில், 01.தமிழவேள் கோ.சாரங்கபாணியார், 02. முதுபெரும் பாவலர் சா.சி. குறிஞ்சிக்குமரனார், 03. தமிழ்நெறி ஞாயிறு அ.பு.திருமாலனார், 04. பேராசிரியர் இர.ந.வீரப்பனார், 05.கம்பார் கனிமொழி குப்புசாமி, 06. தமிழ்ப் புனல் மணி வெள்ளையனார், 07.தமிழ்த் தொண்டர் திருமாறன், 08.இரெ.சு. முத்தையா, 09.முத்தமிழ் முரசு இரா. திருமாவளவனார், 10.மூலப்பெருந்தமிழ் அறிஞர் இர. திருச்செல்வனார், 11.திருமுறைச் செம்மல் ந.தர்மலிங்கனார், 12.சிவத்திரு. ஆறு நாகப்பனார், 13.தமிழக்கழல் அ.இராமன், 14.தமிழ்வளவர் ந.பொன்னுசாமி, 15. கவிஞர் தீப்பொறி பொன்னுசாமி.

இதற்கு மேலும் இப்பட்டியலில் தங்களுக்குத் தெரிந்த மேலும் வேறு யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம்.

இங்கே நீங்கள் செய்ய வேண்டிய புதிய பணி என்னவென்றால், நீங்கள் நீண்டு பட்டியலிட்ட ஒவ்வொருவரும் எழுதிய ஒரு தைப்புத்தாண்டு நூலையோ அல்லது அவர்கள் கைப்பட எழுதிய தைப்புத்தாண்டு குறிப்புகளையோ ஒவ்வொன்றாக சான்றுகளாக எடுத்து, எந்த நூலில், எந்தப் பக்கம், என்று குறிப்பிட்டு ஒவ்வொன்றாக வரிசைப் படுத்தி ஒருவர் விடாது பட்டியல் இடவும்.

அவர்கள் துறையில் அவர்களின் அறிவினை மதிக்கும் அதே வேளை, இதில் எத்தனை பேர் வானியல் அறிஞர்கள், அவர்கள் தைப் புத்தாண்டிற்கு எழுதிய வானியல் அறிவியல் குறிப்புகளையும் சேர்த்து, ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி முறை கிரமப்படி காட்டவும். அதில் எவரையும் உங்கள் பட்டியலிலிருந்து அகற்றாது செய்யவும். அதில் தற்போதுள்ள மலேசிய அறிஞர்களில், எத்தனை பேர் தகமை மிகு உலக வானியல் அறிவியல் கட்டுரைகளை, அல்லது அறிவியல் சார்ந்த கட்டுரைகளை, உலக சஞ்சிகையிலோ அல்லது ஒரு வானியல் அறிவியல் ஆய்வோ செய்து வானியல் பட்டறிவுச் சான்றுகளோடு (Scientific Empirical Evidence) வெளியிட்டுள்ளனர் என்பதை காட்டவும்.

நீங்கள் பட்டியலிடும் பலரின் நூல்களை ஒன்றுவிடாது நானும் கற்றிருக்கிறேன். எட்டுத்துக்காட்டாக தமிழ்க்கடல் மறைமலை அடிகளார், அறிஞர் திரு வீ.கா போன்றோர் நூல்கள் எனது உணர்வுகளில் இன்றும் பசுமையாக நிறைந்து இருக்கின்றன. இதில் ஒருவரும் தை தமிழ்ப்புத்தாண்டு (கவனமாக சொல்லைக் கவனிக்கவும் - இங்கு நான் பேசுவது , தொடராண்டு அல்ல) என்று கூறியதாக தெரியவில்லை.

அப்படி செய்யாது, எழுத்து மேற்கோள் கண்ணியம் இல்லாது, நீங்கள் செய்திருக்கும் நீண்ட பட்டியலில் தைப்புத்தாண்டைப் பேசாதவர்கள், வானியல் அறிவியல் தெரிந்தவர் தெரியாதவர், பெயர்களை எல்லாம் இணைப்பது தங்களின் சுய விருப்பமல்லாது வேறு என்னவென்று சொல்லுவது. இதுவரை தை தமிழ்ப்புத்தாண்டு பற்றி பேசாத, எழுதாத பலரை அவர்கள் கூறியதாகச் சொல்லி, வலிந்து தங்களின் கொள்கைக்கு, சுயவிருப்பிற்குப் பட்டியலிட்டு மக்களைக் கண்துடைப்புச் செய்வதை நாம் எப்படி அழைப்பது? அதற்கு பெயர் என்ன? இதற்கு பெயர்தான் தமிழை அரசியல் ஆதாயப் பொருள் ஆக்குதல் என்பதாகும்.

11) அவர்கள் துறையில் அவர்களின் அறிவினை மதிக்கும் அதே வேளை, நீங்கள் பட்டியலிட்டிருக்கும் பலரில், எத்தனை பேர் வானியல் அறிவியல் கற்றவர்கள்? அல்லது தைப்புத்தாண்டு வானியல் அறிவியல் பற்றிய பெரும் கட்டுரைகளைப் படைத்தவர்கள் ? வானியல் தகைமைசால் அறிஞர்களாக இல்லாவிடினும், யார் நுட்பமான புதிய தைப்புத்தாண்டு தொடங்கும் வானியல் குறிப்புகளைப் பதிவுசெய்தவர்?

முதலில் நாம் உணரவேண்டிய, கற்க வேண்டிய ஒரே குறள்

**எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண் பதறிவு**
**(குறள் 423)**

அதை நாம் சரியாகச் செய்யாது இவர் சொன்னார், அவர் சொன்னார் என்ற வள்ளுவ மெய்ப்பொருள் காண் திறன் இழப்பது அறிவுடைமையன்றோ.

12) அடுத்துத் தங்களின் பணிபட்டியலில் (Task List), மிக முக்கியமாகச் சேர்க்க வேண்டிய பணி, எல்லா சங்க கால வானியல் குறிப்புகளையும், ஆராய்ந்து, அதில் எப்படித் நீங்கள் குறிப்பிடும் புதிய தைப் புத்தாண்டு கால அறிவியல் உள்ளன என்று குறிப்புகளுடன், சான்றாக எழுதவும்.

13) தற்போது தொல் தமிழர் உடு வானியல் சித்திரை கால கணிதத்தில் நானும், நீங்களும் சவாரி செய்வதால், அதை மறுக்க முயலும் தங்களுக்கு மறுதலிப்பு எழுதும் சுமை அதிகம் என்பதால் தாங்கள் நீண்டு விளக்க முயலும் மற்ற வானியல் விரிவுரைகளுக்கு, நான் மேலும் கேள்வி கேட்டுத் தங்களுக்குப் பணிபட்டியல் (Scientific Task List) உருவாக்கினால் அது மிக சுமையாகிவிடும். ஆகவே நமது வானியல் ஆய்வை ஒவ்வொன்றாகச் செய்ய கணித விரிவுரையாளராக இருந்து முறையாக வழிகாட்டத் தயாராக இருக்கிறேன்.

தங்களின் புதிய தை தமிழ்ப் புத்தாண்டு அறிவியல் பணிபட்டியலை (Scientific Task List) சரியாகச் அறிவியலாகச் செய்துவிட்டு உரிமையுடன், தைப்புத்தாண்டு தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவிக்கவும். உண்மை என்பது அனைவருக்கும் பொது, ஆகவே அதை ஏற்பதில் நமக்குப் பெருமிதம். வெற்றி தோல்வி என்பதைவிட, தமிழின் வான் அறிவியல் சிறக்க நாம் யாவரும் ஆங்கிலேயர்களுக்கு நிகராக செயல்படுவது, தமிழுக்குக் கிடத்த வெற்றியாகும். வீண்வாதங்களில் காலத்தைக் கழிக்க அனைவருக்கும் நேரம் இல்லையென்பதால், மேற்கூறியவற்றைச் செய்தப் பின்பு வாத விவாதங்கள் அல்லாது, அறிவியல் தெளிவாக நமது தமிழர் வானியல் ஆய்வை யாவரும் தொடர்வோம்.


ஆழ்ந்து சிந்தித்தால், முறையான, முழுமையான தமிழர் வானியல் அறிவியல் சான்றுகளோடு (Proper Complete Tamilar Astronomical Scientific Evidence)

1. புறவயதன்மை (objectivity)
2. மெய்ப்பிப்பு திறன் (verifiability)
3. ஏற்புடமை (Reliability)
4. முறைமையில் நுண்கணித மானத்தில் , முறை முறை நுழைவு பெற இயலுதல் (Systematic mathematical exploration)
5. சரிநுட்பம் (Precision)
6. துல்லியம் (Accuracy)
7. ஊகிப்பு அல்லது கணிப்பு திறன் (Predictability)
8. புலப்பாடு (Observability)
9. தமிழர் தொன்மை இலக்கிய அறிவியல் சான்றுகள் (Ancient Tamilar Scientific Literature Evidences)
10. நுண் இயல்புடைமை (Abstractness)

வகையில், முழுமையாக ஆய்வு செய்து உறுதி செய்யாது, தொல் தமிழர் உடு வானியல் சித்திரை கால பெரும் அறிவியல் கணிதத்தில் அமர்ந்து சவாரி செய்து கொண்டு, எங்குமே எதிலுமே ஒரு உறுதிபாடற்ற, முற்றிலும் அறிவியல் பின்புலம் அற்ற தங்களின் புதிய தைத் திங்கள் புத்தாண்டு கருதுகோளை, பரப்புரை செய்வதை நீங்களே நிறுத்திவிடுவீர்கள் என்று நினைக்கிறேன். உலக வானியல் அறிவுலகம் ஏற்கும் தகைமையுடைய தங்களின் ஒரு புதிய தைப் புத்தாண்டு கணிதம் உருவாகும் வரை, இந்த பரப்புரையைத் தொடராமல் அமைதி காப்பது நல்லது. இல்லையேல்

**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி குருடும் குருடும் குழி வீழுமாறே** (திருமந்திரம் - 1680) கதையாகிவிடும்.

தொல் தமிழர் உடு வானியல் சித்திரைப் புத்தாண்டை மீட்போம், தமிழர்களுக்கும், தமிழுக்கும் இழைக்கும் பெரும் வானியல் அறிவியல் தீங்கை தடுப்போம்.



# திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயில்

# வருடாந்த பெருந்திருவிழா



திருக்கோணமலையின் அடையாளங்களில் ஒன்றாகவும், சத்தி பீடங்களில் ஒன்றாகவும் புகழ்பூத்து விளங்கும் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் கோயில் திருவிழா ஆனது, கடந்த மாசித்திங்கள் 24ம் நாள் செவ்வாய்க்கிழமை அன்று (08.03.2022) காலை 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்துள்ளது. ஒன்பது நாட்கள் திருவிழா இடம்பெற்று பத்தாம் நாளாகிய, பங்குனி நிறைமதி நாள் (17.03.2022) வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு அம்மை தேர்வீதியில் உலா வந்து பத்தர்களுக்கு அருள் புரிவார். அதற்கு அடுத்த நாளாகிய,(18.03.2022) பங்குனி உத்திர தினத்தில் தீர்த்தத்திருவிழா இடம்பெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெற திருவருள் கூடியுள்ளது.

அருள்மிகு பத்திரகாளி அம்பாள் திருக்கோயிலானது தேவாரப்பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கோணேசுவரம் கோயிலை பார்த்த வண்ணம், திருக்கோணமலை நகர மத்தியில் அழகாகவும், அருள்நிறைந்து புனிதமாகவும் அமையப்பெற்றுள்ளது. திருக்கோணமலை நகரின் அடையாளங்களாக கூறப்படும் திருக்கோயில்களில் பத்திரகாளி அம்பாள் கோயிலும் தவிர்க்கமுடியாத ஒன்று. திருவிழா காலத்தில் ஏனைய கோயில்களை விட இங்கு மக்கள் அதிகளவில் வருகை தந்து, அம்பாளின் அருளை பெறுவதனை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

இக்கோயிலின் வரலாறு கர்ணபரம்பரைக் கதைகள், கல்வெட்டுக்கள், பழைய சாசனங்கள் என்பவற்றின் அடிப்படையிலும், கோயிலில் இருக்கும் திருமுன்கள், வாகனம், பொருட்கள் போன்றவற்றையும் கொண்டும் முதலாம் இராசேந்திர சோழனுடைய பதினோராம் நூற்றாண்டில் இக்கோயில் சிறப்புற காணப்பட்டுள்ளது என வரலாற்று பேராசிரியர் திரு. செ. குணசிங்கம் அவர்கள் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இக்கோயில் அதற்கு முன்னர் இருந்தே அமையப்பெற்றிருந்தது என்பது இனங்காணப்பட்டுள்ளது.

கர்ணபரம்பரைக் கதைகளின் அடிப்படையில் நீண்ட காலத்திற்கு முன்னர் குறித்த இடத்தில் அகழி தோண்டிய போது தகளி ஒன்று கிடைத்ததாகவும், அதற்குள் இருந்த அம்பாளின் தாமிரக விக்கிரகம் இப்போதும் கோயிலில் இருக்கின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் கோயிலில் இருக்கும் சிங்கவாகனம் இந்தியாவில் இருந்து கப்பலில் கொண்டு வரப்பட்டதாகவும், குறித்த கப்பல் கோயிலுக்கு நேராக கடலில் அசையாது நின்றதாகவும் அதனால் கப்பல் தலைவன் தனது கனவின் அடிப்படையில் சிங்க வாகனத்தை கோயிலுக்கு கொடையாக வழங்கியதாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

அத்துடன் அம்பாளின் இக்கோயில், பயபத்தி ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற சம்பவங்களை கர்ணபரம்பரைக் கதைகள் குறிப்பிடுகின்றன. யாவுகப் பெண் ஒருவர் தலைவிரி கோலமாக அம்பாளின் சன்னிதானத்தை அவமதித்து சென்றமையால் கழுத்து வாங்கி, துன்பப்பட்டுள்ளார். தனது குற்றத்தை உணர்ந்து தலைமயிரை நேர்த்திக்கடன் அளித்து, அருள் பெற்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது.



முன்னைய காலத்தில் இக்கோயிலில் குருக்கள் ஒருவர் தனது பிள்ளையை பூசை முடிந்த பின்னர் கோயிலில் மறந்து விட்டு விட்டு சென்று விட்டதாகவும், சாத்திர விரோதமாக அவரது மனைவியின் கட்டாயத்தின் அடிப்படையில் கோயிலை இரவில் திறந்து பிள்ளையை எடுக்க முயற்சித்த பொழுது, காவல் தெய்வமாகிய வைரவர் அந்த பிள்ளையை இரண்டாக கிழித்து போடும் உக்கிர மூர்த்தியாக தோற்றமளித்ததாகவும், அதன்பின்னர் உக்கிர மூர்த்தி வைரவரை மந்திர, தந்திர மூலம் இடம்பெயர்த்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குளக்கோட்டன் மன்னன் காலத்தில் இக்கோயில் திருக்கோணேசுவர கோயிலில் எல்லை கோயில்களில் ஒன்றாக இருந்துள்ளது. கோணேசப்பெருமான் வருடாந் தோறும் நகர்வலம் வரும் பொழுது ஒரு இரவு இக்கோயிலில் தங்கிச் செல்வது செல்வதன் மூலம் திருக்கோணேசுவர கோயிலிற்கும் பத்திரகாளி அம்பாள் கோயிலில் இற்குமான தொடர்பு வெளிப்படுகின்றது.

பத்திரகாளி அம்பாள் கோயிலில் காணப்படும் கோயில் கல்வெட்டு 1972ஆம் வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு சோழ மன்னனின் மெய்கீர்த்தி பற்றி விளம்புகிறது. இக்கல்வெட்டு பற்றிய தகவல்களை வழங்கி, ஊக்கம் அளித்தவர் அப்போதைய சாம்பல்தீவு கிராம சபை தலைவராக இருந்த திரு. வ. நா. தம்பிராசா அவர்கள் ஆவார். இந்த கல்வெட்டு ஒன்பது அடி உயரமும், இரண்டு அங்குல அகலமும், ஒன்பது அங்குல நீளமும் உடையது. மூன்று பக்கங்களில் எழுத்துக்கள் காணப்படுகின்றது. இக்கல்வெட்டின் நான்காவது பக்கம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள், எல்லைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1933 ஆம் வருடம் முதலாவது திருக்குடமுழுக்கு திருத் தப்பணிகளுடன், இடம்பெற்று அதன் பின்னர் 1947 இல் இரண்டாவது குடமுழுக்கு பெரு மண்டபமும் கோபுரமும் திருத்தி அமைக்கப்பட்டு இடம்பெற்றது. பின்னர் மூன்றாவது குடமுழுக்கு 1962 இல் வசந்த வசந்த மண்டபத்தையும் மேலும் சில திருத்தங்களுடன் இடம்பெற்றது. பின் பல திருப்பணிகள் இடம்பெற்று 06.02.1980 அன்று, பெருநிறைவு திருக்குடமுழுக்கு நன்நீராட்டு விழா மிக விமர்சையாக இடம்பெற்றது. 1972 இல் இருந்து மூன்று சித்திர தேர்கள் செய்யப்பட்டு தேர்த்திருவிழாவும் வெகு விமர்சையாக இடம்பெற்று வருகின்றது.



அத்துடன் பத்திரகாளி அம்பாளுக்கும், திருக்கோணமலை பாலம்போட்டாறு பத்தினி அம்மனுக்கும், சல்லி அம்பாளுக்கும் நீண்ட காலம் தொட்டு தொடர்புகள் இருந்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது. இக்கோயிலில் காணப்படும் காளி அம்மை கருத்த கூந்தலையும், அடியார்களின் வேண்டுதலுக்கு செவி சாய்ப்பவளாகவும், ஆறாம் பிறை நெற்றி, கண் உடையவளாகவும், புருவங்கள் கருநீல மலர் போன்ற தோற்றம் உடையவளாகவும், அறஒளி பொருந்திய பாதங்களால் பத்தர்களை காப்பதாகவும் காணப்படுகின்றாள்.

இக்கோயிலின் சிறப்புக்கும், அழகுக்கும் முக்கிய காரணமாக விளங்கும் தற்போதைய கோயில் ஆதினமுதல்வர் மற்றும் தலைமைப் பூசகர் சீர்வளர்சீர் (பிரம்மஸ்ரீ) சு. கு. சோமஸ்கந்தக் குருக்கள் தனது 16 ஆவது வயதில் அவரது தந்தையாரின் இறப்பின் பின்னர் கோயில் பூசைப் பொறுப்பெடுத்து சிறப்பாக திருப்பணியாற்றி, கோயிலை இலங்கையிலேயே அடையாளப்படுத்தும் ஒரு கோயிலாக பேணி வருகின்றார். அம்பாள் மீதான இவரது பத்தி, அம்பாளை விதம் விதமாக அலங்கரித்து, உலகமே வியந்து பார்க்கும் அளவுக்கு திருவாசி, வாகனம் என பூசித்து வருகின்றார்.



இக்கோயிலில் வைகாசிப்பொங்கல், ஒன்பானிரவு (நவராத்திரி விழா), கும்ப விழா, இலட்சார்ச்சனை, கேதார கௌரி விரதம் போன்றவை வருடாந்தம் மிக சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக வைகாசி பொங்கல் அன்று கோயிலைச் சுற்றிலும் அதிகளவான பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு மிகச் சிறப்பாக இடம்பெறும்.

ஒன்பானிரவு (நவராத்திரி) காலத்தில், புரட்டாசி திங்கள் முதலாம் பிறைநாள் (பிரதமை) தொடக்கம் ஒன்பது இரவுகள் இயந்திரப் பூசைகள் இடம்பெற்று ஒன்பான் பிறைநாள் (நவமியன்று) சூரன்போர் இடம்பெறும். இக்காலப்பகுதியில் அம்பாள் விசேடமாக அலங்கரிக்கப்பட்டு, அழகு பொங்க காட்சியளிப்பார்.

அத்துடன் திருக்கோணமலை நகருக்கு மிக விசேடமான விழாவான கும்ப விழாவும் இக்கோயிலில் இடம்பெறுகின்றது. திருக்கோணமலையில் இருக்கும் பல கோயில்களில் மேற்கொள்ளப்படும் கும்பங்கள் கட்டாயம் பத்திரகாளி அம்மன் கோயிலிற்கு வந்து செல்லும் மரபும் காணப்படுகின்றது. விதம்விதமாக கும்பங்கள், கரங்கள் தயார் செய்யப்பட்டு கோயில்களில் இருந்து ஊர்வலமாக நகரைச் சுற்றி வரும். அத்துடன் அன்றைய தினத்தில் இக்கோயிலில் "மானம்பூ திருவிழா" இடம்பெறும்.

திருக்கோணமலையை பொருத்தவரை கேதார கௌரி விரதத்துக்கு, விரதம் கடைப்பிடித்து, விரத நூல் எடுப்பதற்கு, ஆயிரக்கணக்கில் அடியார்கள் இக்கோயிலில் காத்திருந்து விரத நூலை பெற்றுச் செல்வதை அவதானிக்க முடியும்.

இத்தகைய சிறப்புடைய திருக்கோயிலான, அருள்மிகு பத்திரகாளி அம்பாள் கோயிலானது திருக்கோணமலையின் வரலாற்றில் அடையாளப்படுத்தப்படல் இன்றியமையாதது என்பதுடன், இக்கோயிலானது இற்றைக்கும் தமிழர்களின் வரலாற்றை பறைசாற்றி நிற்கின்றது என்பது உறுதிப்பாடுடையது ஆகும்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. கார்த்தி ஹரயன்
திருகோணமலை




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# சிறியவை சிந்தியாதிருப்போம்!

அழகும் வளமும் கொண்டது எங்கள் ஈழமணித் திருநாடு! அந்நியர் வரவாலும் ஆட்சியாலும், காட்சிகள் மாறின, காலங்கள் ஓடின, கவலைகள் வந்து கூடின! வசதி வாய்ப்புக்களையும், புதிய மாற்றங்களையும் கொடுத்த அந்நியர் ஆட்சி, எம் மக்களிடையே அவர்களது சமய நம்பிக்கைகளையும் திணித்து, மதம் மாறவும் பணித்தது. அதன் பாரதூரமான விளைவுகளை நூற்றாண்டுகள் கடந்த பின்னும் இன்றும் நாம் அனுபவிக்கின்றோம். தாய் மதத்தில் இருந்து பிரிந்து போனவர்கள், போன இடத்தில் சலுகைகளைப் பெற்றனர், பதவிகளைப் பெற்றனர், படிப்பைப் பெற்றனர், சிலர் புறக்கணிக்கவும் பட்டனர். ஆனால் அவர்கள் எல்லோரும் இன்று தாய்மதமாகிய சைவத்தின் கொள்கை கோட்பாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி நிற்பது தான் வேதனையான விடயம்!

தவறான வழிநடாத்தல்களாலும், மெய்பொருள் தேடுவதில் நாட்டமின்மையாலும், அதிகரித்த வறுமையாலும், பிற சமயங்களைத் தழுவி அல்லுற்று, துயர்கொண்ட நம் உறவுகளை மீட்டெடுக்க சரியான பொறிமுறைகளை வகுப்பதும், எதிரான விசைகளை நீக்குவதும் இன்று எமக்குள்ள கூட்டுப்பொறுப்பு என்பதை நாம் எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும்!

வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில், பாவம் வினைகள் அறுக்கின்ற பாலாவியின் கரைமேல், இன்று கருங்கற் கோயில் கொண்டு அருளுகின்ற திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்கோயில் சூழலில் கடந்த வருடங்களில் நடந்தவற்றை நாம் எல்லோரும் அறிவோம்! சட்டத்திற்குப் புறம்பாகத் தேவாலயங்களும், சொருபங்களும் அமைக்கப்படுவதும், திருக்கேதீச்சர கோயில் வளைவு தகர்க்கப்பட்டு சிவச் சின்னங்கள் காலால் இடறப்பட்டதையும், பார்த்தும் கேட்டும் பரிதவித்திருக்கிறோம். சைவ மக்களின் அடிமடியில் கைவைக்கும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை எதிர்த்து சமயத் தலைவர்கள் குரல் கொடுத்தும், பேரணி ஊர்வலம் நடாத்தியும், பின்னும், அங்கு அரங்கேறும் அடாவடித்தனங்களால், தாய்சமயம் பிரிந்தவர்கள் தாம் இப்போது பின்பற்றும் சமயத்தையும் சேர்த்தே அவமதிக்கிறார்கள் என்பதை எப்போது உணருவார்களோ?

மன்னார் சைவர்களின் பூமி என்பதை இன்று இவர்கள் உணராமல் இருக்கலாம், ஆனால் இந்த மண்ணை ஆண்ட கிறிஸ்தவர்களே அதை உணர்ந்திருந்தார்கள் என்பதை இன்று இவர்கள் அறியவேண்டும்.

1893 ஆம் வருடம் மார்கழித் திங்களில், இன்று திருக்கேதீச்சர கோயில் அமைந்திருக்கும் 40 ஏக்கர் காணியும் ஏலத்திற்கு வந்தது. அப்போதைய வடமாநில ஆள்பதியாக இருந்த சேர். வில்லியம் துவைனம், அந்த ஏலத்தை அறிவித்திருந்தார். எனினும் ஏலம் நடைபெற்ற திகதியில் தமிழர்களின் பணபலத்தை விட கிறிஸ்தவப் பாதிரியார்களிடம் அதிக பணம் இருப்பதை அறிந்து, சைவத் தலைவர்களை அழைத்து அதிக பணம் திரட்டி வரும்படி கூறி ஏலத்தின் திகதியை பின்னுக்கு போட்டார் என்பதும், பின்னாளில் அந்த நிலம் சைவத் தமிழர்களுக்கு சேர்ந்தது என்பதும் வரலாறு!

சேர். வில்லியம் துவைனம் பிரபு அவர்கள் அன்று கொண்டிருந்த நீதியான பார்வை, உரிய நிலம் உரியவர்களையே சேரவேண்டும் என்ற எண்ணம் இன்றிருக்கும் கிறிஸ்தவ தலைவர்கள் அறிய வேண்டிய ஒன்று!

நிற்க, கடந்த வருடம் சிவனிரவு தினத்துக்காக அமைக்கப்பட்ட திருக்கேதீச்சர வளைவை இடித்து அழித்து, சிவ சின்னமான நந்திக் கொடியை மிதித்து அவமரியாதை செய்தார் என்று சொல்லப்படுகின்ற பாதிரியார் ஒருவர் இவ்வருடம் சிவனிரவு தினத்தில் விபத்தில் பலியானார் என்ற செய்தி, பலரிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சில சைவ அன்பர்களே அவ் மரணத்தை நியாயப்படுத்தி சமூக வெளிகளில் பதிவிட்டிருந்தமையை மிக வருத்தத்துடன் பார்க்கின்றேன். அன்புருவான சிவனை முப்போதும் வணங்குகின்ற நாம் இப்படியான சிறியவற்றை சிந்திப்பதைக்கூடத்தவிர்க்க வேண்டும்! தாய் சமயத்தில் இருந்து பிரிந்தவர்களின் தகாத செயல்களை இறைவன் எல்லாம் வல்ல திருக்கேதீச்சரத்தான் தன் பிள்ளைகள் போலவே பார்த்து உரிய நேரத்தில் உண்மைப்பொருளை உணர்த்துவான் அதுவரையில் நாம், சிவனையே நீக்கமறப் பற்றவும், அவன் புகழையே எங்கும் பாடவும் வழிவகை செய்தல் வேண்டும்.

அதற்கு, திருக்கேதீச்சரக் கோயில் மட்டும் கருங்கல்லால் மன்னாரில் கட்டப்பட்டால் போதாது, மன்னாரின் எட்டுத் திசைகளிலும் சிவலிங்கங்களை நிறுவி முறையான செந்தமிழ் வழிபாடும், தேவார முழக்கமும் செய்தல் வேண்டும், ஈழத்தின் சைவத் தமிழ் பெரியவர்களும் இளைய சமய தொண்டர்களும் இந்த முயற்சியில் தம்மை இணைத்து சிவப்பணியாற்ற முழுமனதுடன் இணைதல் வேண்டும்! இன்று திருக்கேதீச்சரத்தான் எழுந்தருளி இருக்கும், திருக்கேதீச்சர ஆலய சூழலை மட்டும் சைவத்தமிழர்கள் கவனித்து புனிதப்படுத்துவதைத்தாண்டி, பழைய தொன்மையான திருக்கேதீச்சர ஆலயம் அமைந்திருந்த பகுதியையும் அடையாளப்படுத்தி அங்கும் ஆலயம் அமைத்து தேவாரமுழக்கம் செய்தல் வேண்டும்! அங்கனம் செய்வோமாக இருந்தால், மன்னார் சிவபூமி எங்கும் சிவம் சிறக்கும், வளம் பெருகும், மரபு திரும்பும்!

**“சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.”**

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
021 222 9722, sivavethan@thennadu.org



# செய்யுங்கள் சேயோன் வழிபாடு

முருகன் எனும் சொல் பல ஆழ்ந்த பொருட்களைத் தாங்கி மிளிர்கின்றது. முருகன் என்றால் அழகன் என்பார்கள் சிலர். சிலர் குழந்தை என்பார்கள். வள்ளி மணாளன் என்பார்கள் ஒரு பிரிவினர். கிராமியச் சிறுதெய்வம் என்பார்கள் சிலர். ஒவ்வொருவரின் எண்ணப்பாடுகளுக்கு ஏற்றார் போலும் ஒவ்வொரு வகையிலும் முருகன் தோற்றமளித்தாலும் அவற்றைத் தாண்டியும் அவன் மேலோங்கி மிளிர்கின்றான். ஐந்துமுகச் சிவன், ஆறுமுகம் எடுத்து தன் மூவிலை வேல் எனப்படும் முச்சூலத்தின் இரண்டு பக்கக் கிளைகளையும் நீக்கி, எருதிற்குப் பதிலாக மயிலில் எழுந்தான் என்றால் அவனுக்கு பெயர் முருகன். ஈசனே முருகன், முருகனே ஈசன்.

திருமால் என்று அழைக்கப்படும் விட்டுணுவில் சம்புபட்சத் திருமால், அணுபட்சத் திருமால் என வேறுபாடு உள்ளது என்பது கூடத் தெரியாமல் இரண்டு வகைத் திருமால்களையும் ஒன்றாக்கி, “அரியும் சிவனும் ஒன்று அறியாதவர் வாயில் மண்ணு” என்று பல பேர் சொல்லிச் செல்கின்றனர். சமய ஒற்றுமைப்படி இது சரியானது என்று கருதினாலும் சைவசித்தாந்தத்தின் படி முழுத்தவறானது. ஆனால் முருகனும் சிவனும் ஒன்று என நாம் சொல்லத் தயங்குகின்றோம். உண்மையில் முருகனே சிவன், சிவனே முருகன்.

மும்மலம் எனப்படும் முப்புரச்சூரர்களையும் அவர்கள் தம் கோட்டையையும் அழித்தொழித்தவன் ஈசன். அதற்குச் சற்றும் பிசகாமல், அதே போல் சூரபத்மன் உட்பட்ட சூரர்களையும் அவர்கள் இடத்தையும் அழித்தொழித்தான் முருகன். படைப்பவை படைக்கும் பழங்கடவுளாக அயனுக்கும் மேலாகத் திகழ்ந்து அயனையே படைத்தான் ஈசன். அந்த அயனின் தலைகள் கலங்கக் குட்டி, அவனைச் சிறையிலிட்டு படைத்தலைச் செய்தான் முருகன். திருமாலுக்குச் சக்கரம் அருளி அவனைக் காத்தான் ஈசன். அந்தத் திருமாலே கண்டு அஞ்சிய சூரர்களைப் போடியாக்கி அச்சம் நீக்கிக் காத்தான் முருகன்.

ஆக ஈசனும் அழித்தல், படைத்தல், காத்தல் உட்பட்ட ஐந்தொழில்களையும் செய்கின்றான். முருகனும் அதே போல் செய்கின்றான். ஆனால் அயனால் அழித்தல் தொழில் செய்ய முடியாது, அரியால் படைத்தல் தொழில் செய்ய முடியாது, உருத்திரனால் காத்தல் தொழில் செய்ய இயலாது. ஏனெனில் அவர்களின் சத்தி வரம்புக்கு உட்பட்டது. எந்த வித வரம்பும் இன்றி இயங்கும் எல்லையறு பரம்பொருள் ஈசன் ஒருவனே. ஆக ஈசனால் மட்டுமே செய்யக்கூடிய செயல்களை முருகனும் செய்கின்றான் என்றால் அவனும் ஈசனே என்பது வெளிப்படை உண்மை.

ஆனால் இன்று முருக வழிபாடு பல இடங்களில் புறந்தள்ளப்பட்டு, கழித்தொதுக்கப்பட்டு வருகின்றனது. தெரிந்தோ, தெரியாமலோ, முருகனைப் பலர் தவிர்க்கின்றார்கள். இவர்களின் மடத்தனத்தினை நினைத்து என்ன சொல்லுவது. பால் இல்லாமல் மோர் காய்ச்சும் பேரறிவாளர்கள் இவர்கள். சைவத்தின் தன்னிகர் அற்ற வழிபாடுகளில் முருக வழிபாடும் ஒன்று தான். நாயக்கர் காலத்தில் சைவம் பெரும் அளவில் பாதிக்கப்பட்ட போது சைவத்தைக் காத்து தூக்கி நிறுத்தி வழிபாடு முருக வழிபாடு என்றால் சற்றும் மிகையில்லை. எவ்வாறு நாயன்மார்களும், சிவனடியார்களும் அதிகம் தோன்றி பல்லவர் காலத்தில் அபாய நிலையில் இருந்த சைவப் பெருஞ்சமயத்தை மீட்டெடுத்து வீறு கொண்டு எழச் செய்தனரோ அதே போல் நாயக்கர் காலத்தில் அழிவுக்கு உள்ளான சைவசமயத்தை ஏராளமான முருக அடியார்கள் தோன்றிக் காத்தனர் என்றால் அதில் துளி கூட மிகையில்லை.

கச்சியப்பர், அருணகிரிநாதர், குமர குருபரர் என்று யாவரும் அறிந்த அருளாளர்கள் உட்பட ஏராளமான அருளாளர்களும், அடியார்களும் தோன்றி முருக வழிபாட்டின் ஊடாக சைவத்தைக் காத்தனர். சிவபெருமான் தமிழுக்காக நால்வரோடு செய்த திருவிளையாடலைப் போல முருகனும் தமிழுக்காக வந்து வாதிட்டான். நீ சொல்வது தவறு என அவன் அடியவரைப் பிற புலவர் எதிர்த்தபோது வீரசோழியம் எனும் நூல் கொண்டு சான்று கொடுத்தான். அருணகிரிக்கு அடியெடுத்துக் கொடுத்தான். குருபரரின் ஊமை தீர்த்தான். மயில் மீது காட்சி தந்தான். ஏன் எனில் முருகனும் சிவனும் வெவ்வேறு அல்லவே. அருணகிரிநாதரும் கீழுள்ள தம் பாடலில் மிக அழகாக சொல்லிப் போகின்றார்.

**“செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.”**

முருகன் பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவனாம். பிறப்பு இறப்பு அற்றவன் என்றால் அவன் வேல் தாங்கும் சிவனே தான். அப்படியென்றால் முருகனுக்கு பிறப்பே இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆறு குழந்தைகளாய் முருகன் உதித்தனன் என்றே எழுதிப் போகின்றார் கச்சியப்பர். சூரியனும் தினமும் உதிக்கின்றான் ஆனால் அவன் உதிக்க முன்னரே இருக்கின்றான். ஏற்கனவே உள்ள சூரியன் தான் உதய நேரத்தில் உதிப்பான். அது போலத்தான் விடையேறும் பெருமானார் மயிலேறும் பெருமானாக உதித்தார். எனவே சைவத்தின் பெருந்தெய்வமாகிய ஆறுமுகச் சிவனாரை, அணி மாமயில் ஏறும் அண்ணலை, வள்ளியம்மை உடனுறை தெய்வத்தை வழிபடுவோம். வழிபாட்டைப் போற்றி மீட்டு எடுத்தப் பணிவோம்.

**“அஞ்சு முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இரு காலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.”**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு பெருஞ் சிவனிரவுப் பெருவிழா




















# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

## கண்ணோய் மாற்றிய கருணை

வீரப்பச் செட்டியாருக்குக் கண்ணில் ஒரு வருத்தம். கைமருந்து, ஆயுர்வேத மருந்து, கடைமருந்து ஆங்கில மருந்து எல்லாம் செய்து பார்த்துவிட்டார். நோய் கூடியதே அல்லாமல் குறைந்தபாடில்லை. இந்தியாவிலிருந்தும் மருந்துகள் எடுப்பித்தார். காசு கரைந்ததே அல்லாமல் கண்வருத்தம் குறையவில்லை. சித்தானைக்குட்டி சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்புடைய நண்பர் ஒருவர் செட்டியாரிடம் சென்றபோது சுவாமிகளிடம் ஒருமுறை சென்று வாருங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்றார். செட்டியார் தலை அசைத்தாராயினும் செல்லவில்லை. உரியகாலம் வரவேண்டுமே. மருந்து தேடி அலைந்தார் செட்டியார். நண்பர் சில தினங்கள் கழித்து வந்தபோதும் செட்டியார் சுவாமிகளிடம் சென்றதாகத் தெரியவில்லை. கண்ணும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருந்தது. நண்பர் தன்னோடு உடனே புறப்படுமாறு கட்டளை இட்டார். செட்டியார் எதிர்வார்த்தை கூறாது இருவருமாகக் காரைதீவு சென்றனர். இருவரும் தூரத்திலே வரும்போதே சுவாமிகள் கண்டுவிட்டார்கள்.

“வாடா, வா மகனே! எங்கெல்லாமோ திரிந்துவிட்டு இன்றுதான் என்னிடம் வருவதற்கு உனக்கு அவகாசம் கிடைத்ததா? என்று கேட்டார். செட்டியார் சுவாமிகளுடைய திருப்பாதங்களில் தமது கண்களை வைத்து ஒற்றி வணங்கினார். அருகே அழைத்தார் சுவாமிகள். தனக்குப் பக்கத்திலே அமர்த்திக் கொண்டு தன்னுடைய வாயைச் செட்டியாரின் கண்ணருகே கொண்டு சென்று உமிழ்நீரைக் கொப்பளித்து விட்டார்.

செட்டியார் அருவருப்படையவில்லை. கண்ணிலிருந்த எல்லா வருத்தமும் அக்கணமே நீங்கிவிட்டன. சுவாமிகளுடைய உமிழ்நீர் கண்களில் பன்னீர்விட்டுக் கழுவியது போல் குளிர்மையாக இருந்ததென்று கூறினார். தீராநோய் தீர்க்கவல்லானாகிய சித்தானைக்குட்டி சுவாமிகளின் தலைசிறந்த அடியானாக அக்கணமே மாறினார் செட்டியார்.

## கிறித்தவ ஆசிரியர் சுவாமிகளைச் சரணடைதல்

இந்தத் தனது சொந்த அனுபவத்தைச் செட்டியார் எதிர்மன்னசிங்க ஆசிரியருக்குக் கூறியபின்புதான் எதிர்மன்ன சிங்க ஆசிரியரிடம் தவிர்க்க முடியாத அருள்தாகம் ஒன்று எழுந்தது. சுவாமிகளைத் காண்பதற்காக நல்லநாள் ஒன்றும் குறிப்பிடப்பட்டது. 1930ம் வருடம் மார்கழித் திங்கள் 24ம் திகதி பின்னேரம் 5 மணி அளவில் வீரப்பச் செட்டியாரின் உதவியுடன் சுவாமிகளின் திருச்சமூகத்தை அடைந்தார் எதிர்மன்னசிங்க உபாத்தியாயர். அன்று நத்தார்த்தின பூசை. மனைவி மக்கள் எல்லாரும் சர்ச்சுக்குச் செல்ல உபாத்தியாயர் சுவாமிகளை நாடிவந்தார். கிறித்தவ முறைப்படி பெரியவர்களைக் காணச் செல்லப் போகும்போது, ஒரு முழுப்போத்தல் ஜினாம்ஸ் ஜின்னும், உபாத்தியாயர். சென்ற நேரம் சுவாமிகள் கோவணதாரியாகக் காட்சி தந்தார்கள். கையிற் கொண்டு சென்ற கையுறைகளை எல்லாம் சுவாமிகளுடைய திருப்பாதத்திலே வைத்து, அடியற்ற மரம்போல வீழ்ந்து வணங்கினார். பின்னர் எழுந்து முழந்தாளிலே நின்று சுவாமிகளைப் பார்த்துப் பின்வருமாறு வேண்டுதல் செய்தார்:

“அப்பா! நான் ஒரு நல்லவனில்லை மகாபாவி. என்னைப் போல் ஒரு பாவி இவ்வுலகத்திலிருக்க முடியாது. என்னை ஒரு செல்லப்பிள்ளைச் சீராளனாக வளர்க்க முடியுமானால்கூட வைத்துக் கொள்ளுங்கள். அன்றேல் நான் திரும்பிச் செல்லுகின்றேன். விதிப்படி அனுபவித்து செத்து மடிந்துபின் மறுபிறவியிலாகுதல் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் நானோர் சம்சாரி. எனது மனைவியும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். அன்றியும் நான் வறியவனாதலால் எனது சுற்றத்தார் என்னைப் புறக்கணித்து விட்டார்கள். ஆதலால் ஒருநாளைக்காகுதல் நான் ஒரு பணக்காரனாய் உலாவ வேண்டும்.” கண்கலங்க, நாத்தழுதழுக்க, உடல் எல்லாம் நடுநடுங்க வேண்டுகோள் விடுத்து, பிரார்த்தித்த ஆசிரியரைச் சுவாமிகள் நிமிர்ந்து கடைக்கணித்தருளினார்கள். “எதுவேண்டுமானாலும்கேள் மகனே, எல்லாம் கிடைக்கும்” என்று திருவாய் மலர்ந்தருளினார்கள் சுவாமிகள்.

## இறைச்சிக்கறி குப்பைக்கீரை ஆனது

உபாத்தியாயருக்குச் சுவாமிகளோடு உடனிருந்து சமைத்துச் சாப்பிட வேண்டுமென்று ஒரு ஆசை. ஒருநாள் சமையலுக்கு வேண்டிய அரிசி முதலான பொருட்களுடனும் ஒரு கோழியுடனும் ஆச்சிரமத்தை வந்து அடைந்தார் உபாத்தியாயர். சுவாமிகள் புன்முறுவல் பூத்தவராய் எல்லாரும் சேர்ந்து சமைப்போம் என்று கூறி வெகு நேர்த்தியாகச் சமையல் முடிந்தது. முக்கிய கறி கோழிக்கறியாகும். சாப்பிடுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிக்கையில் சுவாமிகள் திடீரெனப் பின்வரும் கட்டளையைப் பிறப்பித்தார்கள்.

“இன்று இந்தச் சாப்பாட்டை இங்கிருக்கும் யாருக்கும் கொடுக்க மாட்டேன். யாரோ சில புண்ணியவான்கள் வருவார்கள். சற்றுப் பொறுத்திருப்போம்.” சிறிது நேரத்தில் ரிஜிஸ்தார் சந்திரசேகரரும் மதியாபரணம் கிளாக்கரும், வேறும் ஒருவரும் வந்து சேர்ந்தார்கள். மூவரும் புலால் உண்ணாதவர்கள். “தம்பிமாரே குப்பைக் கீரைதான் இன்று கறி வாருங்கள் சாப்பிடலாம்” என்றார் சுவாமி. மூவரும் எழுந்து சுவாமிகளுடன் பந்தியிலிருக்க உணவு பரிமாறப் பட்டது. கோழிக்கறியும் பரிமாறப்பட்டது. வந்த மூவரும் எவ்வித வித்தியாசமுமின்றி அதனை உண்டனர். சுவாமிகள் அந்தக் கோழிக்கறியை அவர்களுக்கு எந்த மரக்கறியின்



உருவமாக்கி ருசிக்கச் செய்தாரோ, யாரறிவார்?

## குருநாதருக்கு திருமஞ்சனம்

தனது குருநாதருக்கு திருமஞ்சனம் (அபிசேகம்) செய்து பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் எதிர்மன்னசிங்க உபாத்தியாயர். கையிலோ காசு இல்லை. தனது ஆசையைத் தாயாரிடம் தெரிவித்தார். தாயார் தமது கழுத்தில் அணிந்திருந்த பசும்பொன் சவுக்கமணிக் கோவையைக் கழற்றிக் கொடுத்தார். உபாத்தியாயர் அதை விற்று கத்தரிப்பூ நிறத்தில் ஒரு நெடிய அங்கியும், சப்பாத்து, காலுறை என்பனவும், செம்புக் கம்பியினால் செய்யப்பட்ட ஒரு நெடிய வேலும் நீளமான மயில்தோகையும், பசுப்பாலும் வாங்கிக் காவெடுத்துக் கொண்டு சுவாமி சந்நிதியை அடைந்தார். உபாத்தியாயரைக் கண்டதும் சுவாமிகள் ஓகோ உபாத்தியாயர் பூசகராகிவிட்டாரோ என்று சொல்லிச் சிரித்தார்கள். முறைப்படி சுவாமிகளுக்கு உபாத்தியாயர் திருமஞ்சனத்தை நடத்தி முடித்தார். அன்றைய பின்னேரம் புதிய அங்கி, சப்பாத்து, தலைப்பாகை, கையில் பிரம்பு சகிதமாகச் சுவாமிகள் நடந்து செல்ல, அவரைச் சூழ்ந்து சீடர்கள் சென்ற காட்சி, பார்த்தோர் எல்லாருடைய மனதையும் பரவசமடையச் செய்தது.

## அறியப்படாத கடவுளை அறிவித்தவகை

ஒருநாள் அதிகாலையிலேயே உபாத்தியாயர் சுவாமிகளை நாடிச் சென்றார். ஒரு மூலையில் உட்கார்ந்தார். ஆழ்ந்த ஆலோசனையில் காணப்பட்டார். இதைக் கண்ணுற்ற சுவாமிகள் என்னப்பா யோசிக்கிறாய்?’ என்றார்கள். உபாத்தியாயர் திடுக்கிட்டுவிட்டார். சுவாமிகள் ஒரு மான்தோலை எடுத்துக் கீழேபோட்டு, நீர் ஒரு உபாத்தியாயர்தானே. கணிதம் நல்லாகப் படித்திருப்பீர், இத்தோலில் உள்ள புள்ளிகள் எத்தனை என்று எண்ணிச் சொல்லும் பார்ப்போம் என்றார். உபாத்தியாயர் மிகக் கவனமாக எண்ணி 324 என்று சொன்னார். பார்த்தீரா தினமும் தவறாது மூன்று ஜெபமாலையாவது இறைவனுடைய நாமத்தைச் சொல்ல வேண்டுமென்று இந்தத் தோலிலுள்ள புள்ளிகளே கூறுகின்றன. சரி ஒரு புள்ளியில் எத்தனை மயிர்கள் உண்டு என்பதை எண்ணிக் கூறும் என்றார். என்று உபாத்தியாயர் கூறினார். அது முடியாத கருமம்

அப்படித்தான் மகனே, இந்த மானுக்கு எத்தனை புள்ளியென்றும், புள்ளிக்கு எத்தனை மயிரென்றும் யாரும் திட்டமாகக் கூறமுடியாது. அதற்காகத்தான் அறியப்படாத கடவுள் என்றும், மாலும் அயனும் காணாத சிவன் என்றும் அறிஞர்கள் சொல்கிறார்கள் என்றார் சுவாமிகள். ஆதலால் மகனே யோசிப்பதிற் பயனில்லை. சிவபெருமான் எதை எதை அருளுவாரோ அதை அதை இருகையாலும் வாங்கி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தைரியம் கூறிச் சென்றார். சுவாமிகள் இப்படி வாழ்க்கையில் ஏற்படும் மிக இலகுவான உதாரணங்களைக் கொண்டே பெரிய பெரிய தத்துவங்களை எல்லாம் விளக்கி விடுவார்கள். சுவாமிகள் சில சமயங்களில் சொல்லும் உதாரணங்களும் பிரச்சினைகளும் சிலருக்குப் புரிந்துகொள்ள முடிவதில்லை. சுவாமிகளோடு சில தினங்களாவது ஊடாடினால் அவருடைய கருத்துக்கள் இலகுவிலே புரிந்து கொள்ள முடியும்.

சிறிது நேரங் கழிந்தது. சுவாமிகள் கிணற்றடி வக்கியில் நீர் நிரப்புமாறு கூறினார்கள். கற்பூர தீபாராதனை செய்தார்கள். நீராடுமாறு எதிர்மன்னசிங்க உபாத்தியாயருக்குக் கட்டளை பிறந்தது. நீராடி முடித்துக் கொண்டு ஒரு துண்டு வேட்டி உடுத்தி வெறும் உடம்போடு உபாத்தியாயர் அடியார்கள் மத்தியில் இருந்தார். அப்போது சுவாமிகள் “எனது ஞானப்புதல்வனுக்கு நாமகரணம் சூட்டும்நாள் என்று கூறினார்கள். தாய் தந்தையர் எதிர்மன்னசிங்கம் என்று பெயரிட்டனர். மிஷனரி சுவாமியார் அன்ரனி என்று பெயரிட்டனர். நானும் ஒரு பெயர் வைக்க வேண்டாமா? என்று சொல்லி முடித்தார். ஆ.சி. அரிசித்தரி என்று அழைப்போம்” என்று சொல்லி முடித்தார்.

சுவாமிகள் இலங்கை முழுவதும் ஒரு இடமும் தவறாது கால்நடையாகவே சுற்றியிருக்கிறார்கள். சுவாமிகளுடைய திருப்பாதம் தீண்டாத ஊரே கிடைக்காது என்ற அளவுக்கு சுவாமிகள் எல்லா இடங்களுக்கும் சென்று சித்துகள் விளையாடி உள்ளார்கள். ஒரே நேரத்தில் இரு வேறிடங்களில் தமது சித்தினை நிகழ்த்தியுள்ளார்.

## அநுராதபுரத்தில் சித்து விளையாட்டு

யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த சுவாமிகள் ஒருமுறை அநுராதபுரத்திலே தங்கினார்கள். அதிகாலையில் எழுந்து நுவரைப் பிள்ளையாரை வழிபடச் சென்றார்கள். சுவாமிகள் செல்லும்போது கோயில் ஐயர் யாரோ சிலரோடு ஊர் விவகாரங்கள் பேசிக்கொண்டிருந்தார். சுவாமிகள் கோயில் மண்டபத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். தியானம் கலைந்து எழுந்தார்கள். மணி எட்டாகிவிட்டது. ஐயரின் அரட்டை நின்றபாடில்லை. சுவாமி ஐயரைப் பார்த்து “மணி எட்டாகியும் கோயில் பூசைக்கு ஒரு ஆயத்தமும் செய்யாதிருப்பது சரியா? என் எழும்பிப் பூசைக்குரிய ஆயத்தங்களைச் செய்தால் என்ன?” என்று கேட்டார். சுவாமிகளுடைய வார்த்தைகளைக் கேட்ட ஐயருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. “அடே, என்னை நீ வைச்ச ஆள் என்று நினைத்தாயா? நீ யார் என்னைக் கேட்க? நீ மணியகாரனா? அல்லது எஜமானனா?” என்று பாய்ந்து விழுந்தார் ஐயர்.

“ஆம்! நான்தான் எஜமானன் என்பதை நீ அறியீரா? சரி அறிவித்து வைக்கின்றேன்” என்று சுவாமிகள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். சுவாமிகள் அன்றிரவே கோயிலுக்குச் சென்று பிள்ளையார் சிலையை எடுத்துக் கொண்டு போய் ஒரு அன்பருடைய வீட்டில் கொடுத்து, இந்தாரும் எனது அன்புப் பிள்ளையாரை வைத்து நன்றாகப் பூசை செய்வீராக என்று சொல்லிவிட்டு புகையிரதம் ஏறி யாழ்ப்பாணம் சென்று விட்டார்.

அடுத்தநாட் காலை கோயில் ஐயர் கோயிலைத் திறந்து உள்ளே சென்றார். என்ன ஆச்சரியம்! பிள்ளையார் சிலையைக் காணவில்லை. கோயில் பூட்டியபடியே இருக்கத்தக்கதாகச் சிலை காணாமற் போனது தான் ஐயருடைய ஆச்சரியத்திற்குக் காரணமாகும். கோயில் முதல்வரிடம் அறிவித்தார். பொலிசிலும் பிராது(முறைப்பாடு) செய்யப்பட்டது.

“முதல்நாள் ஒரு பரதேசி தன்னோடு தர்க்கமிட்ட செய்தியைக் கூறி அவர்தான் இதனைச் செய்திருக்கக் கூடுமெனவும்” ஐயர் கூறினார். கோட்டில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. சுவாமிகளுக்குப் பிடிவிறாந்தும் (பிடியாணை) யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. பிள்ளையார் சிலை வைத்துக் கும்பிட்டுக் கொண்டிருக்கும் பத்தரும் விசாரிக்கப்பட்டார். பொலிசார் சகல விபரங்களையும் அறிந்து கொண்டனர். சுவாமியவர்கள் யாழ்ப்பாணத்தில் விறாந்தில் பிடிக்கப்பட்டு அநுராதபுரத்திற்கு கொண்டுவரப் பட்டார். ஆனால் சுவாமியவர்களை நன்கறிந்த சில நியாயதுரந்தரர்களும் அங்கிருந்தனர். நீதிபதியாக இருந்தவர் ஒரு வெள்ளைக்காரர் ஐயர் பக்கமாகப் பேச இருந்தவர் ஒரே ஒரு நியாய துரந்தரர். மற்றவர்கள் எல்லாரும் பணம் எதையும் எதிர்பாராமலே சுவாமிகள் பக்கமாக வாதித்தனர்.

கதவு உடைக்கப்படவில்லை. கூரை சேதப்படுத்தப் படவில்லை. கன்னக்கோல் உபயோகப்படவில்லை. நில அறை தோண்டப்படவில்லை. கதவுகள் வழக்கம்போல் பூட்டப்பட்டிருந்தன. ஐயரும் வழமைபோல் திறப்பினாலேயே கதவைத் திறந்திருக்கிறார்.” அப்படியிருக்கக் களவுக் குற்றச்சாட்டிற்குச் சட்டத்தில் இடமில்லை” என வாதித்தனர். நீதவான் அவர்களும் சட்டத்தின் உட்பொருளை நன்றாக ஆராய்ந்தபின் சுவாமிகளை விடுதலை செய்தார்கள். சுவாமியவர்கள் விளக்க மறியலில் இருந்த ஒருகிழமை காலத்தில் பல திருவிளையாடல்களைப் புரிந்தார்கள். சுவாமி அவர்கள் விளக்கமறியலில் இருந்த காலத்தில் வீதிகளிலே, தவறணையிலே, பலவீடுகளிலே, ஏன் நீதவான் அவர்களுடைய பூந்தோட்டத்திலே, நியாயதுரந்தருடைய இல்லங்களிலே நடமாடி வழமையான குதூகலத்தோடு பாட்டுக்கள் பாடித்திரிந்துள்ளார். ஐயருடைய கண்காணத் தக்கதாகவும் நடமாடினார். இதனால் கோயில் நகரத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருந்தது. பட்டினத்திலுள்ள தமிழரும், சிங்களவரும், முஸ்லீம்களும் சுவாமி மீது பெரிதும் அன்புகாட்டி நல்லமுறையில் ஆதரிக்கலாயினர்.


ஒருகாலத்தில் கதிர்காமத்திலிருந்து திரும்பிய சுவாமிகள் பண்டாரவளையில் சில நாட்கள் நடமாடித் திரிந்தார்கள். ஒருநாள் மாலை நேரத்தில் சுவாமிகள் தனியாக றோட்டோரத்தில் இருந்து கஞ்சா புகைத்துக் கொண்டிருந்தார்கள். பொலீசார் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டனர். வதுளைக் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இங்குள்ள நீதிபதியும் ஒரு வெள்ளைக்காரரே. நீதிபதி சுவாமியைப் பார்த்து குற்றவாளியா? சுத்தவாளியா? என்று கேட்டார். சுவாமிகள் புன்முறுவல் பூத்து இது கோட்டுவழமை தானே. நான் குற்றவாளியோ, சுத்தவாளியோ என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும் என்று கூறினார்கள். நீதிபதிக்கு கோபம் மேலிட்டது. உடனே 50 ரூபா தெண்டம் என்று தீர்ப்பளித்தார். வதுளையில் பிரபல வர்த்தகராயிருந்த அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் உடனேயே பணத்தைக் கட்டி சுவாமிகளை விடுவித்தார்கள்.

(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று- எம்பிரான் திருஞானசம்பந்தன்!





சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

### பொற்றாளம் பெற்ற புகலி வேந்தர்:

திருக்கோலக்காவில் எழுந்தருளியிருக்கும் பெருமான் திருக்கோயில் வலம்வந்து, உள்புக்கு

**“மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.”**

என்னும் திருப்பாடலைத் தமது கையால் தாளமிட்டுப் பாடினார். கை சிவந்ததைக் கண்டு, கருணையே வடிவமான சிவபெருமான் பொற்றாளம் அருள, அது தாளமிட்ட கைத்தலத்து திரு அஞ்செழுத்து எழுதப்பட திருத்தாளம் வந்து சேர்ந்தது. திருஞானசம்பந்தர் வியந்து, பெருமான் கருணையை எண்ணிப் பொற்றாளத்தினை உச்சிமேல் வைத்துப் போற்றித் தொடர்ந்து பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி நின்றார்.

பொற்றாளத்து எழுந்த இசையினைக்கேட்டு, இசையில் வல்ல தும்புரு, நாரதர் முதலோர் வியப்படைந்து மலர்மாரி பொழிந்தனர். ஞானசம்பந்தப் பெருமான், திருவருளைப் போற்றி, மீண்டும் சண்பை நகர் என்னும் சீகாழிக்குப் புறப்பட்டார். சிவந்த கால்களினால் நடந்த பிள்ளையைக் கண்டு வருந்திப் பிள்ளையைத் தனது தோள் மீது வைத்துப் புறப்பட்டார். சீகாழி வந்து, தோணியப்பர் முன்னின்று,

**“பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே.”**


பதிகம் பாடி வணங்கி வாழ்த்தித் தன் திருமாளிகை சேர்ந்தார்.

### முத்துச் சிவிகை பெற்ற முத்தமிழ் வேந்தர்:

தனது தந்தையார் தோள் மீதிருந்து திருப்பயணம் மேற்கொண்ட ஞானசம்பந்தர் இப்போது நடந்து செல்லத் திருவுளம் கொண்டார். சிவபாத இருதயர் மனம் வருந்தியது. ஞானசம்பந்தர் பாதமும் வருந்தியது் உடன் வந்தவர் எல்லாம் சோர்ந்தனர். ஞான சம்பந்தர் ஓதியபடியே சென்றார். மாறன் பாடி என்னும் ஊர் எதிர்ப்பட்டது் அங்கு இரவு தங்கினர்.

ஞானசம்பந்தர் தாள்கள் நோக நடந்து வருவதைக் கண்ட சிவபெருமான் மனம் இரங்கி, முத்துச் சிவிகை, வெண் முத்துக்குடை, ஊதுவதற்குரியவையும் பிற சின்னங்களும் அளித்தார். அரத்துறை அன்பர்கள் கனவில் தோன்றி, “ஞானசம்பந்தன் நம்பால் வருகிறான் அதற்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை மற்றும் சின்னங்கள் அளித்து அழைத்து வருக!” என்றார். திருஞான சம்பந்தர் கனவிலும் தான் அருளியவற்றை உணர்த்தினார்.

திருப்பள்ளி எழுச்சிக்குத் திருக்காப்பு நீக்கியவுடன், திருக்கோயிலில் முத்துப்பந்தர் முதலாயின கண்டு அன்பர்கள் வியந்தனர். அவற்றை எடுத்துச் சென்று, ஞானபாலகரிடம் இறைவன் அளித்ததையும் கனவில் உரைத்ததையும் கூறிச் சிவிகையில் ஏற வேண்டினர். திருஞானசம்பந்தர் இறைவனின் அளவிலாத கருணையை எண்ணி நெகிழ்ந்து கண்ணீர் ததும்ப, முத்துச்சிவிகையை வலம்வந்து ஐந்தெழுத்து ஓதி ஏறினார்.



### திருநாவுக்கரசர் முதல் சந்திப்பு:

அந்நிலையில் திருஞான சம்பந்தர் திருமுலைப் பால் அருந்தியதையும், தலங்கள் தோறும் சிவபிரான் புகழ்பாடிச் செல்வதையும் கேட்டு அதிசயித்து. ஞான சம்பந்தரை வணங்குவதற்காகச் சீகாழி வந்தார் திருநாவுக்கரசர்.

திருநாவுக்கரசர் எழுந்தருளி இருக்கிறார் என்று கேட்டபோதே உவகை கொண்டு அன்பர் பலரையும் அழைத்துக் கொண்டு, வாக்கின் மன்னவரை எதிர்கொள்ளச் சென்றார். திருநாவுக்கரசரை வணங்க வாய்த்தது இப்பிறவி என்றெண்ணினார். நாவுக்கரசு பெருமான் எதிரே வருகிறார். அக்காட்சியைச் சேக்கிழார் அல்லால் வேறு யார் சொல்லவல்லார்?

**“சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கைஉழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவில் பொலிதிரு நீறும்
அந்தமிலா திருவேடத்து அரசும் எதிர்வந்து அணைய.”**

திருஞான சம்பந்தர், தமது மனதில் அடியார் வேடம் எப்படியிருக்க வேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்தார். சிவபிரான் மீது இடையறாத அன்பும், பொலிவான திருநீறு அணிந்த மேனியும், எளிய தூய ஆடையும், இறைவனை எண்ணும் தோறும் எண்ணும் தோறும் பொழியும் கண்ணீர் மழையும் சிவஞானமே போன்ற தோற்றமும் உடையவரே தொண்டர் வேடங் கொண்டார் என்று எண்ணியிருந்தார். திருநாவுக்கரசரைக் கண்ட போது திகைத்து மகிழ்ந்தார். ‘தொண்டர் வேடம் நேரே தோன்றியது’ என்று பெருமானைத் தொழுதார். நாவரசும் வந்து இறைஞ்சினார்.

இருவரும் அளவு கடந்த மகிழ்வோடு திருத்தோணிப் பொற்கோயில் சென்று வழிபட்டனர். தமது மாளிகைக்கு அழைத்துச் சென்று தங்க வைத்தார். நாள்தோறும் விருந்திட்டுச் சொல் விருந்தும், பரமர் மீது பதிகம் பாடியும் ஞானசம்பந்தர், நாவுக்கரசுடன் மெத்த மகிழ்ந்து இருந்தார்.

**திருச்சிற்றம்பலம்**





திருமதி. வைத்தியக் கலாநிதி. சு.உமாமகேஸ்வரி அவர்களின் உயரிய சிந்தனையில் எழுந்த படைப்பான “ஞானசம்பந்தர் வாழ்வில் அற்புதங்கள்” என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டவை. இளைய தலைமுறைக்கு இந்த நூல் ஒரு வரப்பிரசாதம் ஆகும். அம்மாவின் சைவப் பணிகள் மென்மேலும் தொடர எல்லாம்வல்ல அருள்மிகு ஐம்பூதநாதர் துணைநிற்கட்டும்.

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு பெருங்கருணை நாயகி உடனுறை அவிநாசியப்பர் [பெருங்கேடிலியப்பர்] திருக்கோயில்- திரு அவிநாசி [திருப்புக்கொளியூர்]

## [தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 205ஆவது திருக்கோயில் – திரு அவிநாசி]

**“காரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே”** என்று இறைவனுக்கே, சுந்தரர் பெருமான் கட்டளையிட, சிவபெருமான் அருளினால் நீரில்லா மடுவில் நீர் நிறைந்திட, பெருவாய் முதலை கரையின் கண்கொடு வந்து, சுந்தரரிடம், பாலகனாக உண்ட சிறுவனை மூன்றாண்டில் முழுவளர்ச்சியோடு கவினழகு படைத்த பையனாகவே உயிருடன் உமிழ்ந்து விட்டுச் சென்றது.

மூலம் ஆன திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த ஞாலம் உய்ய எழுந்து அருளும் நம்பிஆரூரர், இத்தகைய அதிஅற்புதம் நிகழ்த்திய, அவிநாசியப்பர் உறையும் சிவத்தலம் தான், அருள்மிகு பெருங்கருணை நாயகி உடனுறை அவிநாசியப்பர் திருக்கோயில். இது சுந்தரால் பாடப்பட்ட கொங்குநாட்டுத் தலங்களுள் முதல்தலமாகும்.

**அமைவிடம்: திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு**

அவிநாசி, சென்னைக்கு செல்லும் நெடுஞ்சாலையில், கோவையிலிருந்து 40 கி. மீ, திருப்பூரிலிருந்து 14 கி. மீ, திருமுருகன்பூண்டியிலிருந்து 5 கி. மீ,கோவை - ஈரோடு நெடுஞ்சாலையில் இத்தலம் உள்ளது. கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்:** அவிநாசியப்பர், அவிநாசி ஈசுவரர், அவிநாசிநாதர், பெருங்கேடிலியப்பர்.
**இறைவியார் திருப்பெயர்:** கருணாம்பிகை, பெருங்கருணை நாயகி.
**கோயில் மரம்:** பாதிரி மரம் (ஆதியில் மாமரம்)
**தீர்த்தம்:** காசிக் கங்கை, காசிக்கிணறு, நாகக்கன்னிகைத் தீர்த்தம், ஐராவதத்தீர்த்தம்.
**வழிபட்டோர்:** தான்தோன்றி மூர்த்தி, முருகப்பெருமான், ஞானப்பெருங்கருநாயகி, வெள்ளையானை, நாக கன்னிகைகள், சங்கண்ணன், மாரீசனின் தாய் தாடகை, தெய்வ ரம்பை, எக்ஞகுப்தன், வசிட்டர், சிவயோகி முனிவர் முதலானவர்கள்
**பாமாலை:** சுந்தரர் - எற்றான் மறக்கேன், மாணிக்கவாசகர், சேக்கிழார் முதலியோர்

**நாயன்மார்களால் பாடப்பட்ட பதிகங்கள்**
**சுந்தர மூர்த்தி நாயனார் அருளியது**

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன்
உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி
யூர்அவி னாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி
யேபர மேட்டியே



**மாணிக்கவாசகர் அருளிய திருப்பதிகம்**

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவினாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே

### திருத்தலச் சிறப்பு

திருப்புக்கொளியூர் ஆகிய இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமமே **“அவிநாசி”** என்பது. இன்று ஊருக்கும் அப்பெயர் வழங்கி வருகின்றது. ஊழிக் காலத்தும் விநாசமின்றி இருப்பதால் புக்கொளியூரனுக்கு அவிநாசியப்பர் என்று பெயர். நாசம் எனில் கேடு. விநாசம் எனில் பெருங்கேடு. அவிநாசியப்பர் என்பதன் தொகுப்புப் பொருள் பெருங்கேடிலியப்பர் எனலாம். அம்பிகையின் பெயர் கருணாம்பிகை. பெருங்கருணைநாயகி என்றும் சொல்வதுண்டு.

கோயிலின் ஓரத்தில் ஓடும் ஓடை போற் காட்சி தருவது ஒரு சிற்றாறு. அதன் பெயர் நள்ளாறு. ஒரு காலத்தில் இந்நள்ளாற்றில் நல்ல தண்ணீர் ஓடியது உண்டு. அப்போது அது தீர்த்தமாய்த் திகழ்ந்தது. இப்போது தீர்த்தமாய்த் திகழ்வன கோயில் சந்நிதியில் கங்கையை ஒக்கும் காசிக் கிணறும், நாக கன்னிகைத் தீர்த்தமும், ஐராவத தீர்த்தமும் ஆகும். ஆதியில் கோயில் மரம் மாமரம். அதனடியில் அன்னை கருணாம்பிகை அருந்தவம் செய்து, எம்பெருமானின் இடப்பாகம் பெற்றாள். மாமரம் இருந்த இடத்தில் பாதிரி மரத்தையும் அம்மை மாதவம் செய்த இடத்தில் அவளது தவக்கோலப் படிமத்தையும் இன்றும் பார்க்கலாம்.

காசி விசுவேசுவரரிடமிருந்து ஒரு வேர் கிளைத்து ஓடி அவிநாசியப்பராய் முளைத்ததென்று தலபுராணம் மொழியும். **‘திருப்புக்கொளியூர்’** முதன்முதலில் கோயிலுக்கும் குளத்திற்கும் தென்பால் இருந்தது. பதிவுப் பத்திரங்களில் **‘புக்கொளியூர் நத்தம்’** என இப்போது காணப்படுகின்றது.

காசியில் வாசி (சிறப்பு) அவிநாசியல்லவா? ஆகையால் கால பைரவருக்கு இங்கு மகிமை அதிகம். சிவனடியார் தவறிச் செய்த குற்றங்களுக்கு இயமனை ஏவாது, பைரவரைக் கொண்டு தண்டனை கொடுத்துத் தீர்த்தலும், வாழ்வு முடிவோர் காதில் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதுதலும் சிறப்புக்களாக அறியப்படுகின்றன. இறைவனின் பக்கத்திலேயே உள்வீதியில் ஈசானிய திக்கில் கங்கைத் தீர்த்தத்தினருகே தெற்கு நோக்கி நான்கு கைகளுடனும், நாயுடனும் கால பைரவர் காட்சியளிக்கிறார். காரியம் கைகூடப் பெற்றவர்கள் வாரத்தில் இருமுறை வடைமாலை சாத்தி இவ்வரசித்தி மூர்த்தியை வணங்குகின்றனர்.

இவ்வூர்த் தலபுராணம் 1021 பாடல்களையும், 13 சருக்கங்களையும் உடையது. இது இளையான் கவிராயரால் இயற்றப் பெற்றது. கரும்புலவர் என்ற கருணைதாசர் செய்த கருணாகர மாலைக் கீர்த்தனைகளும், செட்டிப்பாளையம் மகா வித்துவான் வாசுதேவ முதலியார் இயற்றிய கருணாம்பிகை சதகமும், கௌமார மடம் கந்தசாமி சுவாமிகளின் யமக அந்தாதியும், கோவைச் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பாடிய கருணாம்பிகை பிள்ளைத் தமிழும், கோவைக்கவியரசு நடேச கவுண்டரின் கீர்த்தனைகளும் போன்றன குறிப்பிடத்தக்கன. 1153-ம் வருடம் குலோத்துங்க கொங்குச் சோழன் காலத்திலிருந்து 1695ல் சிக்கதேவராய உடையார் காலம் வரை சுமார் நாற்பது கல்வெட்டுக்களைச் சுற்றுப்புற மண்டபச் சுவர்களிலும், சந்நிதித் தூண்களிலும் கண்ணுறலாம். இந்தியப் பேரரசின் பழம்பொருட் பாதுகாப்பில் இத்திருக்கோயில் உள்ளது. பக்கத்தே பாடல் பெற்ற திருமுருகன் பூண்டியும், வைப்புத்தலமான சேவூரும், மொக்கணீசுரமும் அமைந்துள்ளன. “இதுவோ அவிநாசி இத்தலமோ, வாவா என்றழைத்த மண்” என்னும் பழம்பாடல் ஒன்று இவ்வூரின் பெருமை பற்றிச் சுருக்கமாய் எடுத்துரைக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெரிய தேர்களில் அவிநாசித் தேரும் ஒன்று. ‘திருவாரூர்த் தேரழகு’ என்று திருவாரூர்த் தேரைச் சிறப்பாகக் கூறுவர். அந்தத் தேருக்கு நிகரானது அவிநாசியிலுள்ள இந்தத் தேர். இத்திருக்கோயிலின் கோயில்மரமான பாதிரி மரமானது திருவிழாக்காலங்களில் மட்டும் பூக்கும் அற்புதம் நிறைந்தது.

### திருத்தல வரலாறு

மறையோர் வாழும் திருப்புக்கொளியூர் வீதியில் சுந்தரர் செல்லும் போது எதிர் எதிரான இரு வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும், பிறி தொன்றில் அமங்கல ஒலியும் கேட்டு ஐயுற்று, ஆண்டுள்ளாரை வினவினார். மங்கல ஒலி முழங்கும் வீட்டுச் சிறுவனுக்கு முப்புரிநூல் அணியும் விழா நிகழ்கின்றதென்றும், அவனோடு ஒத்த வயதினனாய் இருந்த எதிர்வீட்டுச் சிறுவனை, மூன்றாண்டுகளுக்கு முன் முதலை விழுங்கி விட்டதால், அவனை ஈன்றோர், தம் புதல்வன் உயிருடன் இருப்பின் அவனுக்குத் தாமும் உபநயனம் செய்வித்து மகிழலாமே என்ற ஏக்கத்தால் அழுகின்றனர் என்றும் அவ்விடம் இருந்தோர் அறிவித்தனர். சுந்தரர் அங்கு எழுந்தருளியிருப்பதை அறிந்த அப்பெற்றோர்கள், தங்கள் துன்பத்தை முற்றும் மறந்து தெருவில் உற்று, ஆரூரர் திருவடிகளை அகமிக மகிழ்ந்து வணங்கினர். சுந்தரர் இந்நிகழ்ச்சிப் பற்றி வினாவிய போதும் அக்கதையை விவரிக்காமல் அவரது வருகைக்கு மகிழ்ந்து வரவேற்றனர்.

சுந்தரர் அவர்களுக்கு அருள்புரியத் திருவுளம் கொண்டு அந்தக் குளக்கரைக்கு அழைத்துச் சென்று, **“எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே”** என்ற பதிகத்தைப் பாடியருளினார். நான்காம் திருப்பாட்டில் **“கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே”** என்று முடித்தவுடன் வறண்டிருந்த குளத்தில் நீர் நிரம்பியது. பிள்ளையை விழுங்கிய முதலை வந்தது. கவினழகு படைத்த அப்பையனைக் கக்கியது. தன் வயிற்றினுள் பத்துத் திங்கள் சுமந்து பெற்றெடுத்த தாய், மூன்றாண்டின் முழு வளர்ச்சியோடு முழுமுதற் கடவுளின் திறத்தால் முதலையின் வயிற்றிற் பெற்ற அப்பையனைனை ஆரத்தழுவினாள். பெற்றோர் இருவரும் திருவருள் திறத்தில் திளைத்து அவிநாசியப்பரை ஆரூரருடன் தொழுதனர். அப்பையனுக்குப்புப் பொருள் மங்கல வாத்தியங்கள் முழங்க உபநயனம் செய்து வைத்தார் சுந்தரர்!

அக்குளக்கரையில் சுந்தரருக்குத் தனிக்கோயில் ஒன்றுள்ளது. சுந்தரர் திருவுருவமும், அதன் முன் முதலை



தான் உண்ட பிள்ளையைக் கக்குகின்ற வடிவமும் காணப்படுகின்றன. மூவர் முதலிகள் செய்த அற்புதங்களுள் முதலைவாய்ப்பிள்ளையை அழைத்ததே அதியற்புதம் என்று சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையில் குறிப்பிடுகின்றார்.

### திருக்கோயில் அமைப்பு

கோயிலின் முன் உயர்ந்த தீபத்தம்பம் உள்ளது. அதில் மீன் வாயிற் சிவலிங்கத்தையும், முதலை வாயிற் பிள்ளையையும், தாளம் கைக்கொண்ட சுந்தரரையும் பார்க்கிறோம். நுழைவாயிலில் இருமருங்கும் வீற்றிருக்கும் இரு நடன விநாயகரைக் கண்டு உயரமான கோபுர வாசற் படியை அடையலாம். உயரத்தை அறிய தலை நிமிர்ந்து பார்த்தால், நடை விட்டத்தின் நடுவில் உச்சிப்பிள்ளையார் ஓரடி உயரத்தில் மேற்கு நோக்கிக் காட்சியளிப்பதைப் பார்க்கலாம். ‘கணபதி பூசை கைமேல் பலன்’ எனும் முதுமொழிக்கேற்ப இங்கு சாரம் கட்டி, மேலே சென்று, திருமஞ்சனம் செய்து, பூசித்தால் விரைவில் பெருமழை பெய்வது அனுபவம் என்று கூறப்படுகிறது. உட்புறம் கோபுர வாயிலில் இறைவனை நோக்கியவாறு இடப்பக்கம் சுந்தரரும், வலப்பக்கம் வாதவூரரும் நிற்பதைக் காணலாம். முன் மண்டபத்தில் ஊர்த்துவ தாண்டவ நடராசர், ஆலங்காட்டுக் காளியம்மை முதலிய ஆறு பெரிய ஆறடி உயரமுள்ள திருவுருவங்கள் 6 உள்ளன.

உள்வீதியில் சிறு செய்குன்று போன்றுள்ள மேடை மேல் குமரன் காட்சி தருகிறார். கருவறையில் உள்ள மூலவர் காலம் கடந்தவர். தான்தோன்றி மூர்த்தி, முருகப்பெருமான், ஞானப்பெருங்கருநாயகி பூசித்த இவரை, இரண்டாம் யுகத்தில் (திரேதா யுகம்) பன்னிரண்டு வருடங்கள் வெள்ளை யானையும், மூன்றாம் யுகத்தில் (துவாபர யுகம்) மூன்று வருடங்கள் மாரீசனின் தாய் தாடகையும், நான்காம் யுகமான கடைசி யுகத்தில் (கலியுகம்) இருபத்தொரு திங்கள் நாக கன்னிகைகளும் வழிபட்டு விரும்பிய வரம் பெற்றனராம். ஐந்து நாள் வழிபட்ட சங்ககன்னனும், ஒருநாள் வழிபட்ட தெய்வ ரம்பையும், ஒரு முகூர்த்தம் வழிபட்ட எக்ஞகுப்தனும் வீடுபேறு பெற்றார்கள் என இத்தல புராணம் இயம்பும்.

வெளிவீதியில் பெருங்கருணாம்பிகையின் கோயில் உள்ளது. தன் திருமகளுக்குக் **“கருணாம்பிகை”** என்று திருப்பெயரிட்டு மகிழ்ந்த அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், கருணாம்பிகை அன்னையின் இராசகோபுரச் செலவு முழுதும் ஏற்றதனால், விண்ணளாவி நிற்கும் அந்த இராச கோபுரம் கம்பீரமாகக் காட்சி நல்கி நிற்கிறது. இறைவியின் திருவுருவம் சுமார் மூன்றரையடி உயரம் இருக்கும். நின்ற திருக்கோலம், எழிலான திருவுருவம். உற்று நோக்கினால் அவளிரு அருள் விழிகளிலே பெருங்கருணை பெருகுவதைக் காணலாம். இறைவி கோயிலின் வெளி மண்டபத்தில் உள்ள சிறிய, அழகிய, சிறந்த வேலைப்பாடுடைய குறவன், குறத்தி, வேடுவன், வேட்டுவச்சி போன்ற ஆறு சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன.

**வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி!**

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி -

## அருள்மிகு மாதுமையாள் அம்மை உடனுறை திருக்கோணேச்சரர் திருக்கோயில் - திருக்கோணேச்சரம்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இலங்கையிலுள்ள ஈச்சரங்களில் எல்லாவற்றிலும் முதன்மைத்தானமாகத் திருக்கோணேச்சரம் விளங்கியுள்ளது. தேவாரம் ஓதிய நாயன்மார்களின் காலத்திலே மிகுந்த சிறப்பினைப் பெற்ற திருத்தலமாகவும் விளங்கிய திருக்கோணேச்சரம், இலங்கையின் கிழக்கு கரையில் திருகோணமலை நகரில் அமைந்துள்ளது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத்தில்

**“கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும் நித்திலம் சுமந்து குடிதனை நெருங்கிப் பெருக்கமாய் தோன்றும் கோணமாமலை”** என்றும்,

**“விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண் செருத்தி செண்பகத்தின் குருத்தோடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை”** என்றும்

இயற்கை எழில் பொழியும் செல்வவளமும், குடிப்பெருக்கும் நிறைந்த சூழலில் குடிகொண்ட திருத்தலமாய் விளங்குகின்றது என ஓதியுள்ளார். இங்கு கோணேச்சரநாதரும் மாதுமை அம்மையும் மூர்த்தியாக விளங்க, பாவநாசம் புண்ணிய தீர்த்தமாகவும் சிறப்பு பெற்றுள்ளது. தட்சணகைலாயம், திரிகோணம், கோணபர்வதம், திரிகூடம், தென்கைலாயம் என திருக்கோணேசுவரத்திற்கு பல பெயர்கள்



உண்டு. மட்டகளப்பு தேசத்தார் வழக்கில் நீண்ட காலம் தொட்டு மச்சகேச்சரம் என்றும் ஐரோப்பியர் ஆட்சிக் காலங்களில் சுவாமிமலை என்றும் கோணேசர் மலை என்றும் பெயர் பெற்று விளங்கியுள்ளது.

### புராணக்கதைகளில் கோகர்ணம்

வட இந்தியாவில் குப்தர் காலத்தில் எழுதப்பெற்ற புராணங்களில் அடங்குகின்ற வாயுபுராணம், மச்சபுராணம் ஆகியவற்றிலும் இத்தலம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. வாயுபுராணத்தில் வரும் தகவல் படி மலய தீவு என்னும் நாட்டின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ண என்ற சிவனின் பெயரைக் கொண்ட சிவன் கோயிலைப் பற்றிக் குறிப்புள்ளது. எனவே இப்புராணம் எழுதப்பட்ட காலத்தில் வட இந்தியச் சைவர்களால் போற்றப்பட்ட வகையில் கோணேச்சரத்தின் புகழ்பரவியிருந்தது.

ஆதிசேடனும், வாயுபகவானும் தம்முள் மாறுபட்டு இகலிய நாளில் இருவரும் தத்தம் வலிமையைக் காட்ட முயன்று பெரும் மேருவின் கொடுமுடிகளை ஆதிசேடன் தன் பாணாமுடிகளால் மூடிக்கொள்ள, வாயுபகவான் தன்வலி மேம்பாடுற மேருவின் சிகரங்களில் மூன்றைப் பிடுங்கிக் கடலில் வீசிவிட, அவைகளில் ஒன்று இலங்கையில் வீழ்ந்து திருகோணமலையாக அமைந்தது என்பது வாயு புராணக் கதையாகும் இதில் திரிகோணம் இமையத்தின் சிகரங்களுள் ஒன்று என்று சொல்ப்படுவாதால் அது தென்கைலாசம் என்னும் பெயரைப் பெற்றது. திரிகோணத்தில் அமைந்துள்ள சிவன் கோயில் தலப்பெயரின் காரணமாக திருக்கோணேச்சரம் என்னும் நாமத்துடன் விளங்கியது. இக்கதை கோகர்ண சிவன் கோயிலின் தல புரணமான ஸ்ரீ தட்சண கைலாச புராணத்தின் சிறப்புப் பாயிரத்தில் இவ்வாறு வர்ணிக்கப் பட்டுள்ளது.



**“மணிநிறக் கண்டன் மாண்புறு கயிலையின்
அணிநிறக் கொடுமுடி ஆயிரத்தோர் முடி
படவரவு ஒதுங்கப் பறித்தரும் இலங்கை
வடகடல் நடுவன் மாதிரம் பதிப்ப
வரு முக்கோண மலை தென்கயிலை”**

மச்சபுராணக் கதையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்ற ஸ்ரீ தட்சணகைலாச புராணத்தில் திருமால் மச்சாவதாரத்தில் தென்கயிலாயத்தை அடைந்து, அங்கு மீன் வடிவிலிருந்து நீங்கித் தனது சுயவடிவில் மகேசுவரனை வணங்கியமையாலேயே, தட்சணகைலாசமானது மச்சகேசுவரம் என்னும் பெயரைப் பெற்றது என்று மேல்வரும் பாடலொன்றால் அறிய முடிகின்றது.

**“ஆய தென்கைலாயத்தின் தென்புற மனுகி
மாய மச்சமாம் உடலையக் கடல் வழி வைத்துக்
தூய தன்னுருக் கொண்டரன் சந்நிதி துன்னிச்
சேய கங்கணம் முன்வைத்து வணங்கினன் திருமால்
மல்கு மச்சமாம் கேசவன் பெயரினை மலையும் புல்கு
மச்சகேஸ்வரமெனத் திருப்பெயர் புகன்றார்”**

### திருத்தல வரலாறு

போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியரான டி.குவைறோஸ் பாதிரியவர்கள் **“பூரி ஜெகந்நாத்திற்கும், இராமேசுவரத்திற்கும் போய் வழிபட்டு விட்டு வரும் அடியார்களிலும் பார்க்க மிக அதிகமானோர் இக்கோயிலை வழிபட்டு வருகின்றார்கள்”** என்று தமது நூலில் குறிப்பிட்டதன் படி தமிழ் நாகரீகத்தின் பிறப்பிடமான குமரிக்கண்டம் கடலுள் மூழ்குவதற்கு முன் தமிழ் மக்களின் சமயக் கோட்பாடுகள் சிறந்து விளங்கிய காலத்தில், கடலுக்குள் மூழ்கிய குமரிக் கண்டத்தின் பல பாகங்களிலும் சிவத்தலங்கள் பல இருந்துள்ளன. இத்தலங்களுக்கு இந்தியாவின் வடக்கேயிருக்கும் சிவபத்தர்கள் யாத்திரை செய்து வந்துள்ளனர். குமரிக் கடலுள் மூழ்கிய பின்னும் அந்தப் பாரம்பரிய பழக்க வழக்கங்களை அவர்கள் கை விடவில்லை. இவ்வாறு பழமைக் காலம் தொட்டு வட இந்திய, தென்னிந்திய இறை நம்பிக்கை உடைய பெருமக்களும் திருஞானசம்பந்தர், அப்பர் பெருமான் ஆகிய நாயன்மார்களாளும் பத்தியோடு பூசிக்கப்பட்ட திருக்கோயிலாக விளங்கியுள்ளது.

தொடக்க காலத்தில் தற்போது உள்ள மலையின் அடிவாரத்திலேதான் கோயில் அமைந்திருந்தது, கடற்கோளினால் அழிவடைந்த பின்பு மலையுச்சியில் கோணேச்சரப்பதி அமர்ந்தார். மலையடிவாரத்தில் அமைந்திருந்த கோணநாதரை நாகர்கள் வணங்கியமைக்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன. கடலினுள் மூழ்கிய பண்டைய திருகோணேச்சர தலத்தின் பாகங்கள் கடல் சுழியோடிகளால் கண்டுபிடிக்கப்பட்டு படமாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஓர் சில தெய்வச் சிலைகளின் அடிப்பாகத்தில் **“மணிநாதன்”** என்ற பெயர் பொறித்திருப்பதாக பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் இனங்கண்டுள்ளார். இதனால் திருக்கோணேச்சரம் இலங்கையின் பழமைக் குடிகளான நாகர்கள் பூசித்த தலம் என்பது உறுதியாகின்றது.

குளக்கோட்டன் என்ற பெயரைக் குறிப்பிடுங் கல்வெட்டொன்று திருகோணமலைக் கோட்டையின் வாசலிலுள்ளது. அது பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.


| | |
|---|---|
| (1) ன்னே குள | (1) (மு)ன்னே குள |
| (2) காட்டன் மூட்டு | (2) (க்)காட்டன் மூட்டு |
| (3) ருப்பணியை | (3) (தி)ருப்பணியை(ப்)பி |
| (4) ன்னே பறங்கி | (4) ன்னே பறங்கி |
| (5) கவே மன்ன | (5) (ரிஃக) கவே மன்ன (வ) |
| (6) ன பொன்ணா | (6) (பி)ன் பொண்ணா (த) |
| (7) ன யியற் | (7) (தனா)ன யியற் (றஃவ) |
| (8) த வைத் | (8) (ழித்)த வைத்து |
| (9) ணா | (9) (எண்) ணா(ர்வரு) |
| (10) கள் | (10)(வேந்தர்) கள் |

இதன்படி குளக்கோட்டன் திருப்பணியால் உருவக்கப்பட்ட கோயிலைப் பறங்கியர் பிடிப்பார்கள் பின்பு பூனைக் கண்ணர், புகைக்கண்ணர், செங்கண்ணர் என்போர் போனபின் வடுகரின் ஆட்சியாகிவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

### கல்வெட்டுச் சாசனங்கள்

திருக்கோணேச்சரம் பற்றிய வரலாற்று மூலங்களில் மானாங்கேணிக் கல்வெட்டும், நிலாவெளிக் கல்வெட்டும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பதவியா, திருகோணமலை, கந்தளாய் ஆகிய மூன்று நகரங்களும் சோழர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த காலத்தில் இந்துப்பண்பாட்டம்சங்கள் நல்நிலையில் இருந்தன என்பதைச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. அதில் சோழ இலங்கேசுவரனின் ஆட்சியாண்டுகளில் எழுதப்பெற்ற மானாங்கேணிக் கல்வெட்டில் திருகோணமலை ‘மாத்ஸ்யகேஸ்வரம்’ என்று குறிப்பிடுவதாய் அமைந்துள்ளது. தமிழுங்கிரந்தமும் கலந்து எழுதப்பெற்ற அச்சாசனம் பின்வருமாறு உள்ளது.

**“......ஸ்ரீசோழ இல
தேவற்கு யாண்டெ
டி சோழ மண்ட
ஐந்தர சோழ வள
சோழ வளநா
மலை ஸ்ரீ மச்சு
மூலஸ்தானமு
வர முடையார்
ள மண்டலத்தி..”**



இதே போல் நிலாவெளிக் கல்வெட்டில் வரும் **“ஸ்ரீ கோணபர்வதம் திருகோணமலை மத்ஸ்ய கேஸ்வரமுடைய மஹா தேவர்”** என்னும் தொடரிலும் மேற்கூறிய சாசனத்தில் கூறப்பட்ட செய்தி வந்துள்ளது.

10ஆம் நூற்றாண்டுக்குரிய நிலாவெளிக்கல்வெட்டில் திருகோணமலை மச்சேச்சரத்துக்கு கருவறையும், நாள்வழி பாட்டுத் தேவைக்கு நிவந்தமாக நிலம் கொடுக்கப்பட்ட செய்திகள் சாசன வாசமாக எழுதப்பட்டுள்ளது.

### குளக்கோட்டனின் கோகர்ணத் தருமம்

திருக்கோணேச்சர கோயில் தருமங்களோடு தொடர்பு பட்டு அதிக இலக்கியங்களில் பேசப்படும் மன்னன் குளக்கோட்டன் ஆவான் ஸ்ரீதட்சண கைலாச புராணத்தின் பாயிரச் செய்யுளில் இம்மன்னின் கோகர்ணக் கோயிலின் திருப்பணிகள் பற்றி இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது

**“பார்தாங்கு கோயிலும் பொன் மண்டபமுங்
கோபுரமும் பரற்கு நாட்டி
பேர் தாங்கு மாயனுக்கு மலங்கார
வாலய மொன்றியற்றி முந்துங்
கார் தாங்கு திருக்குளமும் பாவநாசச்
சுனையுங் கண்ட கண்டன்
சீர்தாங்கு குளக்கொட்டனென்னும் சோழங்கனை
நாம் சிந்தையில் வைப்பாம்”**

இதன்படி விமானம், எழில்மிகு மண்டபம், கோபுரம் ஆகியன பொருந்திய மகத்தான ஈச்சரத்தையும் அழகிய பெருமாள் கோட்டத்தையும் மழைநீரைத் தேக்கும் திருக்குளத்தையும், பாவநாசம் என்னுஞ்சுனையினையும் குளக்கோட்டன் என்று குறிப்பிட்டுள்ளது.

### தல இலக்கியங்கள்

திருக்கோணசுவர திருத்தலத்தின் மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமைகளையும், புராண இதிகாசக் கதைகளோடு தொடர்புபடுத்தும் நம்பிக்கைகளையும், பத்திப்பதிகமாக அருளிச் செய்தவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆவார். இவர் பாடிய பத்து பதிகங்களும் திருக்கோணேசுவரப் பதிகம் என்று அழைக்கப்படுகின்றது. கோணேசுவரப் பதியின் பெருமையை **“தாயியும் நல்ல தலைரென்றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்...”** என்ற பதிகத்தில் பாடியருளியுள்ளர்.

இதனால் ஈழத்தில் சம்பந்த பெருமானால் பாடப்பட்ட மூத்த தலம் என்ற சிறப்பையும் பெற்றுள்ளது. ஈழத்தில் எழுந்த தலபுராணங்களில் மூத்தது தட்சண கைலாயபுராணம் ஆகும். இது திருக்கோணேசுவர கோயிலின் வரலாற்று மகிமையை எடுத்துக்கூறும் நூலாகும். இதேபோல் கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம், திருகோணமலை அந்தாதி என்பனவும் திருக்கோணேசுவர வரலாற்றுடன் தொடர்புபட்ட தல இலக்கியங்களாகும்.

### பூசைகளும் விழாக்களும்

ஆகம விதியை தழுவி பூசைகள் இடம் பெற்று வருகின்றன. இக்கோயிலின் வருடாந்தத் திருவிழா பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் நடைபெறும் மற்றும் சிவனிரவு, திருவாதிரை, ஆருத்திரா தரிசனம், கேதார கௌரி விரதம் போன்ற விரதவழிபாடுகளும் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன

**“தன்னருட் பெருமையும் வாழ்வும் கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர் கோணமாமலை அமர்ந்தாரே”**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



மாசித் தேய்பிறை கழுவாய் வழிபாடும் தென்னாடு மாசித் திங்கள் இதழ் வெளியீடும்





ஐம்பூதநாதருக்கு சிறப்புத் திருமஞ்சனம்



திருக்கயிலாய பரம்பரை மெய் கண்ட சந்தானம் பேரூர் ஆதீனம் 25 பட்டம் குருமகாசன்னிதானம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களுக்கு தென்னாடு ஐம்பூதநாதர் திருநீற்றுப்பை கையளிப்பு. (11-03-2022)





பரந்தன் அருள்மிகு குமாரபுரீசர் திருக்கோயில் சங்கு நீராட்டு (15-03-2022)







புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற சிவத்திரு.தமிழ்ச்செல்வன், திருமதி.த.தயாநிதி அவர்களின் புதல்வன் கஜலக்சன் அவர்களை தென்னாடு சிவமடம் சார்பாக வாழ்த்தியபோது. (14-03-2022)



தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதினேட்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 17ம் நாள் நிறைமதி அன்று (17-03-2022 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org